விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி 16 | வியாழக்கிழமை (30.06.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 193

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## மட்டு. ஈழநாதம் பணியாளர் நேற்றுக் காலை சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஈழநாதம் பத்திரிகையின் பணியாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பாபி என்று அழைக்கப்படும் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த கன்னமுத்து அரசகுமார் (வயது 38) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பத்திரிகைகளுடன் நிந்தாவூர் முகவரிடம் சென்றுகொண்டிருந்தபோது கல்முனை-அக்கரைப்பற்று வீதியில் மட்டுப்பொல என்ற இடத்தில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அவரை பின்தொடர்ந்து வந்த இரு அடையாளம் தெரியாத நபர்களே துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாக கூறப்பட்டது. கழுதத்துப்பகுதியில் இருமுறை சுடப்பட்டுள்ள அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொலையாளிகள் 9எம்.எம் ரக கைத்துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. கன்னமுத்து அரசகுமார் சுட்டுக்கொல்லப்பட்ட இடம் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

### செம்மணிப் படுகொலை

## மரபணுச்சோதனை அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

செம்மணி மனிதபடுகொலை தொடர்பாக மரபணு பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்யுமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கின் விசாரணை கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்ற நீதிபதி குசலசறோஜினி வீரவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. செம்மணிப் புதைகுழி எலும்புக்கூடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனை அறிக்கையை அடுத்த விசாரணைத்திகதியான செப்ரெம்பர் 30 ஆம் திகதிஅன்று நீதிமன்றில் ஒப்படைக்கவேண்டும் என்று குற்றப்புலனாய்வுப்பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் சமுகம் அளித்த குற்றப் புலனாய்வுப்பிரிவினர் இம் மரபணு சோதனை அறிக்கை சட்டமா அதிபரின் பார்வைக்கு கடந்த ஆண்டு அனுப்பிவைத்ததாகவும் அவரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களை உள்ளடக்கும் வகையில் பொதுக்கட்டமைப்பு வரைபில் மாற்றம்

## நோர்வே-புலிகளுடன் அரசு பேசும்!

(நமது நிருபர்)

**அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் வகையில் மாற்றங்களை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்துள்ளார்.**

**ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு இவ்வுறுதி மொழியினை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இது குறித்து நோர்வே அனுசரணையாளர்களுடனும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

முஸ்லிம்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுடன் அரசை விட்டு வெளியேறப் போவதாக அறிவித்த தேசிய ஐக்கிய (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இன்று ஸ்ரீ.சு.கவின் மத்திய குழுக்கூட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இன்று மாலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் பெயரை இன்று சிபார்சு செய்வதற்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் உத்தேசித்திருப்பதனால் கூட்டம் மிகமுக்கியம் வாய்ந்ததாக அமையுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல இடங்களில் நடைபெற்று வரும் சிறிலங்கா சுதந்திரகட்சிக் கிளைக் கூட்டங்களில் ஏற்கனவே கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பிரதமரின் பெயரை சிபார்சு செய்து அதுபற்றி கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் க.கா.குழுத்தலைவர் இன்று சந்திப்பு

### வெலிகந்தைச் சம்பவம் குறித்துப் பேசுவர்!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்குருப் ஹெக்லண்ட் இன்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இன்று இராணுவக் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி செல்லும் அவர் காலை 10 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப்பேசவுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பை மிகவிரைவாக அமுல்படுத்தக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட சில தமிழ்க் கட்சிகள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. தமிழ்தேசிக் கூட்டமைப்பு மலையக மக்கள் முன்னணி உட்பட்ட கட்சிகளும் இனவாதத்திற்கு எதிரான சில அமைப்புக்களும் இவ் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலைக்குள் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

பிறின்ஸ் கொலம் என்ற பாதாள உலக குழுவின் தலைவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்றபோது றிஸ்வானி என்ற பாதாள உலகத் தலைவரின் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிப்பிரயோகம் சிறைச்சாலைக்குள் இருந்து மேற்கொண்டதாகவும் பொலிஸார் (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்ட நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

(திருகோணமலை)

திருகோணமலையில் அனுமதி இன்றி அமைக்கப்பட்டுள்ள மதத் தலங்களை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாவட்ட நீதிமன்றம் விடுத்த உத்தரவை இடைநிறுத்துமாறுகோரி நேற்று அடிப்படை மனித உரிமை மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம் மனுவை சீனங்குடா பௌத்ததேரர் ஒருவர் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் சட்டமா அதிபர் நகர அபிவிருத்தி சபையின் தலைவர் ஆகியோரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள சுதந்திரமாக மதத்தை பின்பற்றும் உரிமைக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரப்பகுதியில அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை உட்பட இந்து கிறிஸ்தவ மத தலங்களை உடைத்து அகற்றுமாறு சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய மாவட்ட நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை நகரப்பகுதியல் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுமாறு கோரி திருகோணமலை .மக்கள்பேரவையினரால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச.8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-23499??,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக்க கலை சிறந்த சாதனமாகும் – வணபிதா மரிய சேவியர்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக மாற்றும் நோக்குடனேயே திருமறைக் கலாமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் வணபிதா மரியசேவியர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக மாற்றி சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்கவேண்டும். இவ்வாறு இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக மாற்றுவதற்கு சிறந்த முறையாக கலை உள்ளதனாலேயே கலை மூலம் இளைஞர்களை சமூக உணர்வுள்ளவர்களாக மாற்றுவதற்கு திருமறைக்கலாமன்றம் 1965 ஆம ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த வருடத்துடன் 40 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த 40 ஆண்டுகளில் எமது மன்றம் கவின்கலைகளை வளர்ப்பதில் துரிதமாக ஈடுபட்டு வந்துள்ளதுடன் பல நாடகங்களையும் மேடையேற்றியுள்ளது.

அத்துடன், 13 தடவைகள் வெளிநாடுகள் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளதுடன் சென்ற ஆண்டு கூட கனடா உட்பட 9 நாடுகளுக்கு சென்று தமிழ், சிங்கள கலைஞர்கள் இணைந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடாத்தினர்.

மேலும் எமது மன்றத்தால், யுத்தத்தால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஸ்ரங்கள், பிரச்சினைகளை சிங்கள கலைஞர்களுடன் இணைந்து தென்னிலங்கையில் நாடகமாக மேடையேற்றி சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் இன முரண்பாடுகளை கலை மூலம் அகற்றும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். (ற-19)

## மஹா கணபதி ஹோமம்

(சாவகச்சேரி)

நாட்டில் அமைதியும், சாந்தியும், சமாதானமும் வேண்டி மீசாலை அருள்மிகு திரு.நீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் "மகா கணபதி ஹோமம்" எதிர் வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

அமைதி, சாந்தி, சமாதானம் வேண்டி 15 ஆவது ஆண்டாக இடம் பெறவுள்ள ஹோமதினம் வழமை போல் மகேஸ்வர பூசையும் இடம் பெறும். (அ-21)

## அராலியில் 23 வீடுகள்

(பொன்னாலை)

உலகவங்கியின் நிதிப்படுத்தலின் கீழ் வடக்கு-கிழக்கு வீடமைப் புத்திட்டத்தில் அராலி மத்திக் கிராமத்திற்கு 23 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மேற்படி கிராம அலுவலர் பிரிவில் 19 புதிய வீடுகளை அமைக்கவும் 4 வீடுகளைப் புனரமைப்புச் செய்யவும் பூர்வாங்க வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-49)


## சிறுவிளம்பரம்

### மலயாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை**

(9567)


# விடுதலைப் புலிகள் மீது ஹெல உறுமயவிற்குப் பயம்

## சுட்டிக்காட்டுகிறார் நிதியமைச்சர்

(கண்டி)

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் உண்ணாவிரதத்தைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை என்று நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக எதனையும் செய்யாமல் அவர்களுக்குப் பயந்தே செயற்படுகிறார்கள் எனக் கண்டியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைவரையும் முட்டாளாக்குவதற்காக கண்டியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்ய முனைந்தவர்கள் யாழ்ப்பாணத்திற்குப் பயம் காரணமாகவே செல்லவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக இவர்கள் இராணுவப் படையேதேனும் அமைத்துள்ளனரா? இல்லை. யாராவது ஒருவரைத்தானும் இராணுவத்தில் இணையுமாறு சொல்லியுள்ளார்களா? இராணுவத்தில் தற்போதுள்ளவர்கள் தப்பிச் செல்வதைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அந்தப் பணிகளையும் ஜே.வி.பியோ அல்லது ஜாதிக ஹெல உறுமயவினரோ இதுவரை செய்யவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# நிலையான சமாதானம் முதலீடுகளுக்கு உந்து சக்தியாக அமையும் என்கிறார்

## உலக வங்கிப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலை, முதலீடுகளை மேற்கொள்வதற்கு உசிதமானதாக இல்லை என்று அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு சர்வதேச அமைப்புக்களும் மேற்கொண்ட ஆய்வை அடுத்து ஒருங்கிணைந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நீடித்துவரும் நிலையற்ற அரசியல் தன்மையே இதற்கான காரணம் எனவும் அடிப்படை வசதிகள், நிதி வசதிகளை ஏற்படுத்துவதில் உள்ள சிரமங்கள் முதலீடுகளை ஏற்படுத்துவதற்கான சூழலை உருவாக்குவதற்குத் தடையாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடுகளுக்கான நிலையை அதிகரிக்கச் செய்வதற்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது உந்துதலாக அமையும் என்று இலங்கைக்கான உலகவங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் நாட்டின் வறுமையைப் போக்க நிரந்தர செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு முதலீடுகள் அதிகரிக்கச் செய்யப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)

## இராசி பலன்

**30.06.2005**
**(ஆனி 16, வியாழக்கிழமை)**
**நவமி பிற்பகல் 3.33 மணிவரை**
**ரேவத முற்பகல் 10.54 மணிவரை**
**இராகுகாலம் 01.26 - 2.56 மணிவரை**
**சுபநேரம் 7.26 - 08.56 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, உறவினர் சந்திப்பு, நல்லமுயற்சி, போசன சுகம். |
| இடபம் | கடின வார்த்தை, பணவிரயம், முயற்சி தாமதம், சயனசுகக்குறைவு. |
| மிதுனம் | கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி, தொழில் வருமானம், முயற்சி கைகூடும். |
| கடகம் | தொழில் மேன்மை, அதிகாரம், உறவினர் உதவி, சுப செய்தி. |
| சிங்கம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிரயாணம், எதிர்பாராத செலவு. |
| கன்னி | தர்மம். காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, தனவிரயம். |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம், நல்ல வருமானம், தேக நலன். |
| விருச்சிகம் | ஆரோக்கியம், தொழில் நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம். |
| தனுசு | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், பண விரயம், சொத்துப்பிணக்கு. |
| மகரம் | மாதா சுகம், ரோக நிலை, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| கும்பம் | சுவாரஸ்யம், பிரயாண நன்மை, பண வருவாய், சகோதரர் உதவி. |
| மீனம் | வேலைச்சுமை, காரிய தடங்கல், பணவிரயம், உறவினர் வெறுப்பு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# தொழிலாளி உயிரிழப்பு

(கொழும்பு)

தலவாக்கலப் பகுதியில் தேயிலைக் கொழுந்து ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் பெட்டி கழன்று ஆற்றில் விழுந்ததினால் பெட்டியில் இருந்த தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றும் ஒரு தொழிலாளி படுகாயமடைந்து சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நானோயா தோட்டத் தொழிலாளிகள் பறித்த தேயிலைக் கொழுந்துகளை ஏற்றிக்கொண்டு இவ் உழவு இயந்திரம் தலவாக்கலப் பகுதியில் சென்றுகொண்டிருக் கையில். வளைவு ஒன்றில் பெட்டி கழன்று 200 அடி பள்ளத்தில் கொத்மலை ஆற்றுவளைவில் விழுந்ததினாலேயே தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். (ற-8)

# வீரச்சாவு

(கிளிநொச்சி)

போராளிகள் இருவரும் தமிழீழ தேசிய துணைப் படைவீரர் ஐவரும் வீரச்சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

21.03.1993 அன்று எதிர்பாராத வெடிவிபத்தொன்றில் வீரவேங்கை டியோ (செல்வராசா - பாலசுப்பிரமணியம், சொ.இடம் - 98 கொலனி, தம்பலகாமம், தற். இடம்- இல.6/7 கிருஷ்ணன் கோயிலடி, மடத்தடி, திருகோணமலை)

02-12-1993 அன்று முல்லைக்கடற்பரப்பில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரவேங்கை - அருண் (சித்திரவேல் - சண்முகலிங்கம் சொ.இடம்- 6 ஆம் வட்டாரம் சேனையூர், தற்.இடம் அன்பு குடியிருப்புத்திட்டம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மேலும், 22.06.1998 அன்று கதிரவெளியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் விமானத்தாக்குதலின் போது த.தே.து.வீ.தவராசா (சந்திரசேகரம் - தவராசா, அதியமான்கேணி, லிங்கபுரம், கிளிவெட்டி)

07.07.1992 அன்று கல்வரப்பு என்னும் இடத்தில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவம் பதுங்கித் தாக்கியதில் த.தே.து.ப.வீரர் - மதிவதனன / பாலசிங்கம் (புண்ணியம் - பாலசிங்கம், பூமரத்தடிச் சேனை, ஈச்சிலம்பற்று)

18.04.2003 அன்று மூதூர் இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் காடையர்கள் தாக்குதலின் போது த.தே.து. ப.வீரர் - கமலதாசன் (தர்மலிங்கம் - கமலதாசன் (றஞ்சன்) சொ.இ.-கடற்கரை சேனை மூதூர், தற். இ.- 5 ஆம் வட்டாரம் சம்பூர்)

28.09.2002 அன்று எதிர்பாராத வெடிவிபத்தில் த.து.ப.வீரர் - கோணலிங்கம் (கணபதிப்பிள்ளை - கோணலிங்கம், சொ.இ.- 2ஆம் வட்டாரம் ஆலங்கேணி)

02.09.2001 அன்று திருமலை கடற்பரப்பில் இராணுவத்தின் தாக்குதலில், த.தே.து.ப.வீரர் - காளிகரன் (சிவபாலன்- காளிகரன் (குமரன்), சொ.இடம்- 10 ஆம் குறிச்சி விவேகானந்த நகர் திருமலை) ஆகியோரே வீரச்சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தயா சந்தகிரியின் சிபார்சு நிராகரிப்பு

(கொழும்பு)

பிரித்தானியக் கடற்படையினர் தற்போது பயன்படுத்திவரும் சேர் கலகட் என்ற தரையிறங்கு கடற்கலத்தைக் கொள்வனவு செய்வதற்காக கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி அரசிடம் சிபார்சு செய்திருந்த போதிலும் அக்கோரிக்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலத்தைக் கொள்வனவு செய்வதற்கு 180 கோடி ரூபா செலவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படைத் தளபதியின் இந்த சிபார்சு குறித்து அரசாங் கத்தின் ஆயுத விநியோகக்குழு கடந்த வெள்ளிக்கிழமை ஆராய்ந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தலைமை யிலான இக் குழுவில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத், ஓய்வுபெற்ற முன்னாள் கடற்படைத் தளபதி பசில் குணசேகர, முன்னாள் விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் பதமன் மெண்டிஸ், முன்னாள் பிரான்ஸ் தூதுவர் சந்திரா விக்கிரமசிங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் முன் கடற்படையின் உயர்மட்ட தளபதிகள் பலர் இந்தக் கப்பல் கொள்வனவின் அவசியம் குறித்து விளக்கமளித்தனர். இவர்களது விளக்கங்களை அடுத்தே இக் கப்பலைப் பராமரிக்கும் செலவு கட்டுபடியாகாது என்ற காரணத்தினால் அரசாங்கத்தினால் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ற-4)



வட்டு.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற 'புலரி' சஞ்சிகையின் அறிமுக விழாவின் போது அ.சுபேசன் தலைமையுரையாற்றுவதையும் ஆய்வுரை வழங்கிய தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன், அறிமுகவுரை ஆற்றிய புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# இலங்கையில் இருவேறுபட்ட நடைமுறை

# புத்தர்சிலை விவகாரம் புலப்படுத்தும் உண்மை

திருகோணமலையில் இன வன்முறைகளைத் தூண்டும் வகையில் திடீரென திணிக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தில் தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட நீதிகுறித்து யுனெஸ்கோ அமைப்புக்கு முறையீட்டு மனுக்களை அனுப்புமாறு பிரான்ஸ் தமிழர் மனிதர் உரிமை மையம் உலகத் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான பிரான்சு தமிழர் மனித உரிமை அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புத்தபிரான் கிறிஸ்துவுக்கு முன் 563ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ள கபிலவஸ்து அருகாமையில் உள்ள லும்பினி எனும் கிராமத்தில் இந்து சமயத்தை சார்ந்த அரச குடும்பத்தில் பிறந்தார்.

இவர் தனது இளமை பருவத்தில் சித்தாததர் எனும் பெயருடன் வாழும் வேளையில் தனது அரச வாழ்க்கையைத் துறந்து புதிய போதனைகளில் ஈடுபட்டார்.

இப்போதனைகள் இறுதியில் பெளத்த போதனைகளாக மாறின. இன்றும் பெளத்த போதனைகள் பல இடங்களில் தந்துவங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையே தவிர இதை ஓர் சமயமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆனால் இலங்கையில் இதை ஓர் சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மட்டுமல்லாது பெளத்த சமயத்திற்கு இலங்கையின 1978ஆண்டு அரசியல் யாபபினால் முன்னுரிமை கொடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

பெளத்த தத்துவங்களுக்கு முனனுரிமை கொடுக்கப்பட்டுள்ள இலங்கையில் புத்தரின் போதனைகளான சமத்துவம் சாத்வீகம் போனறவை படுமோசமான முறையில புத்த பிக்குகளினாலும் அரசியல் தலைவர்களினாலும தவறான வழியில் நடத்தப்பட்டு வருவதை யாவரும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் படுகொலைகளும் அட்டூழியங்களும் நிறைந்த ஆட்சி நிலவிவருகிறது.

கடந்த மே மாதம் 15ஆம் திகதி மனித இனமே அதிசயிக்கும் வகையில் பதினைநது அடி உயரமுள்ள ஓர் புத்தர் சிலையை தமிழர்களின் தாயக பூமியான திருகோணமலையில் இலங்கை அரசாங்கத்தின் தூண்டுதலுடன் பெளத்த பிக்குகளும் பெளதத அடிவருடிகளும் இரவோடு இரவாக அரசியல் கலந்த கபட நோக்கத்துடன் நிறுவியுள்ளனர்.

. இந்த அநீதிக்கு உட்படுத்தப்பட்ட திருகோணமலை வாழ் தமிழ் மக்களும் திருகோணமலை நகர சபையும் இப் புத்தர் சிலையை உடன அகற்றுமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

மே 18ஆம் திகதி இவ் விவகாரத்தை விசாரணை செய்த திருகோணமலை மாவடட நீதிபதி, சட்ட விரோதமாக நிறுவப்பட்ட இப்புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கட்டளையிட்டார். மீண்டும் தனது தீர்ப்பை மே 25ஆம் திகதி உறுதி செய்தார்.

ஆனால் இலங்கையில் உள்ள அரசாங்கமும் அதன் பாதுகாப்புப் படையும நீதிபதியின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு எதிர்மாறாக சட்டவிரோதமாக நிறுவப்பட்ட இப் புத்தர் சிலைக்கு பலத்த ஆயுதப் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

இதேவேளை, இபுத்தாசிலையை சட்டவிரோதமாக நிறுவியோர் இதற்கு ஓர் நிரந்தர கட்டடத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இப் புததர் சிலை விவகாரத்தில் அரசு நீதிமன்றத்தின் கட்டளையை ஒரு மாதகாலமாகியும் நிறைவேற்ற வில்லை. மாறாக ஒருமாத காலத்தின் பின்னர் அதாவது சென்ற வாரம் மீள் பரிசிலனை நீதி மன்றத்தினால திருகோணமலை மாவட்ட நீதிபதியின் தீாபு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலஙகையினைப் பொறுத்த வரையில் இங்கு தமிழ் மக்களுக்கு எதிரான எந்தவித நீதிமன்றக் கடடளைகளும் உடன் நிறைவேற்றப்படுகிறது, ஆனால் தமிழர் விவகாரத்தில் பெள்த்த சிங்களவருக்கு எதிரான எந்தவித நீதிமன்றத் தீர்ப்பும் வலுவற்றதாகி விடுகிறது.

பாதுகாபபுப் படைகளின் பிரதம தளபதியும் நிறைவேறறு அதிகாரத்தைக் கொண்டவருமான ஜனாதிபதி விரும்பியிருந்தால் இப்புத்தர் சிலையை திருகோணமலை மாவட்ட நீதிபதியின் உத்தரவுடன் மிகவும் இலகுவாக அகற்றியிருக்கலாம். மாறாக இப் புத்தர் சிலைக்குப் பாதுகாப்பு கொடுத்து சிலையை அகற்றிவிடாது கவனிப்பது இரு வேறுபட்ட நடைமுறைகள் நடைமுறையில் உள்ளது என்பதை தெளிவாக பிரதிபலிக்கின்றன.

கடந்த ஆண்டு ஜுலை ஒகஸ்ட் மாதங்களில் இலங்கைத் தீவுக்கு பயணம் செய்த தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பிரதிநிதிகள் கடந்த நவம்பர் மாதம் வெளியிட்ட பயணத்தின் அறிக்கையில் திருகோணமலையில் மட்டுமல்லாது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகம் தவிர்ந்த மற்றைய பகுதிகளான தமிழர்களின் தாயக பூமியில் அரச மரம் கண்ட இடமெல்லாம் புத்தர்சிலை நிறுவப்படுவதாகவும் அரச மரம் இல்லாத பகுதிகளில் பெளத்த நிறுவனங்களினால் அரச மரங்கள் கபட நோக்கங்களுடன் நாட்டப் படுகினறது எனக் கூறியது இங்கு குறிபபிடத்தக்கது.

பெளத்த சமயம் பாதுகாக்கப்பட பலவிதச் சட்டங்கள் உருவாகினறன. அணமையில் ஜாதிகஹெல உறுமய என்ற புத்தபிக்குகளை அங்கமாகககொண்ட அரசியல கட்சி முக்கியமாக பெளத்தர்கள் கிறிஸ்தவர்களாக சமயமாற்றம் நடைபெறாமல் இருப்பதற்கு பாராளுமன்றத்தில் ஓர் புதிய சட்டத்தை முன்மொழிந்துள்ளனர்.

இச் சட்டத்தை மீறுவோருககு பல வருடகாலச் சிறைத்தண்டனையும் பல இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கக்கூடியதாக இச் சட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. புத்த பிக்குகளே அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர, அரசை நடத்த, அரசை கவிழ்க்க உதவுகின்றனர்.

இந்த ரீதியில் திருகோணமலையில் சட்டத்திற்கு முரணாக நிறுவப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தில் மாவடட நீதிமன்றத்தின் தீர்ப்பு அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

எனவே தேசிய சட்டத்தின் கீழ் செயல் இழநதுள்ள மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த சர்வதேச நிறுவனங்களான ஐக்கிய நாடுகள்சபை, ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம், கலாச்சார ஸ்தாபனமாகிய யுனேஸ்கோ, ஐக்கிய நாடுகள்சபையின் மனித உரிமை ஆணையாளர், ஐக்கிய நாடுகள் சபையின் சமய உடன்பாடுகளுக்கான பிரதிநிதி போன்றோர் திருகோணமலையில் இரத்தக்களரியைத் தவிர்க்கவும் இன்னுமொரு போர் மூளாமலும் உடனடியாகத் தலையிட வேணடிய தேவை ஏற்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-4)

### ஆசிரியர் உள்ளீர்ப்பு தொடர்பில்

# துறைசார் அதிகாரியினால் விளக்கம் அளிக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

புதிய சுறறு நிருபத்திற்கு அமைவாக ஆசிரியர்களை உள்ளீபபு செயயும் போது ஒவ்வொரு கல்வி வலயங்களுக்குமிடையில் வேறுபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு வடக்கு -கிழக்கு மாகாணசபை துறை சார்ந்த அதிகாரி ஒருவரை அனுப்பி இது தொடர்பான விளக்கம் அளிக்கப்படல வேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

வலயக் கல்விப் பணிமனையில் உள்ள நிர்வாக அதிகாரிகளுக்கும் கணக்காளர்களுக்கும் எல்லா இடத்திலும ஒரே விதத்தில் நடைமுறைப் படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினால் இதை அமுல் படுத்தும பட்சத்தில் மிக விரைவாக ஆசிரியர்கள் பதவி உயர்வைப் பெறமுடியும். அத்துடன், பாக்கி சம்பளத்தையும் தென்பகுதி ஆசிரியர்கள் போன்று ஒரே நேரததிலேயே பெற்றுக்கொள்ள முடியும எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ற-19)

# சுனாமி மீள்குடியேற்றப் பிரதேசங்களில் புதிய நீர் விநியோகத்திட்டம் அமுல்

### அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்தவர்களை மீளக்குடியமர்த்தும் பிரதேசங்களில் புதிய நர் விநியோகத் திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிததுள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, தென்மாகாணம் ஆகிய பிரதேசங்களில் இந்தத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருததி வங்கி, யுனஸ்கோ நிறுவனம், அரச சார்பற்ற அமைப்புக்கள் இதற்கு நிதியுதவி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டம் அடுத்த வருட இறுதிககுள் பூர்த்தி செய்யப்படும் என்றும அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளபபட்ட மழைநீர் சேகரிக்கும் திட்டமும் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை வழமைக்குக் கொண்டு வரவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-9)

# கஷ்ட, அதிகஷ்ட பிரதேச ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க அரசாங்கம் தீர்மான்ததிருந்த போதும் இதுவரை அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அதிகஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றும்ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும அரசாங்கம் வழங்கத் தீர்மானித்திருந்தது.

ஆனால் இந்தக் கொடுப்பனவு வழங்கவில்லையென சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க வேண்டாம் என நிர்வாகத்திற்கான தேசிய சபை ஆலோசனை வழங்கியுள்ளதாக சங்கத்தின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கொடுப்பனவை வழங்குவதறகு அரசாங்கம் தீர்மானிததிருப்பதாகக்கல்வியமைச்சு தெரிவித்திருக்கின்றது. (அ-9)

# பெண்கள் மேம்பாட்டில் ரணில் அக்கறை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகளை நிறைவு செய்வதில் சுனாமி நிவாரணசபை தவறிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவா ரணில் விக்கிரமசிங்க தெரிவிததுள்ளார்.

லக்வனிதா அமைப்பில் நேற்று முன்தினம் உரைநிகழ்த்திய எதிர்க்கட்சித்தலைவர் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சமயம் ஆண்கள் மற்றும் பெண்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐககியதேசியக்கட்சி பதவிக்கு வந்தால் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்குமான கொள்கைத் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப் படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(து-2)

# இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதுகாப்பாக படையினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் சேவை

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

சுனாமிக்கு பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு மூலம் இலங்கையின் பாதுகாப்பு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாக எழுந்துள்ள கருத்துக்களை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

சுனாமி நிவாரண சபை நடைமுறைப்படுத்தப்படும் கரையோரத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம்கள் அமைக்கப்படலாம் எனவும் குறிப்பிட்ட பிரதேசங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் எனவும் நிலவும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமிக்கு பின்னரான நடவடிககை முகாமைத்துவ கட்டமைப்பு குறிதது நிலவும் சில கருத்துக்கள் மறறும் தவறான எண்ணங்கள குறித்து தெளிவுபடுத்தும் முகமாகவே ஜனாதபதி செயலகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை துறைமுகத்தின் நிர்வாகம் தொடர்ந்தும் அரசாங்கத்திடமே இருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை, மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களும, பலாலி இராணுவ முகாமும், சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பினுள் உள்ளடக்கப்படவில்லை. என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த அரசங்கம் கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்படிக்கையில 12ஆகிய பிரிவுகளுக்கு அமைய தெரிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு வலயங்களுக்குள் உட்பிரதேசிப்பதற்கான அனுமதியை வழங்குவதை அரசாங்கம் மறுக்கமுடியும் என்றும் ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

போாநிறுத்த உடன்படிக்கைக்கு அமைய இலங்கை அரசாங்கத்தின பாதுகாப்புப் படையினர் நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# பால் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக விசேட திட்டமொன்றை கால்நடை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

சபையின் கீழ் செயற்படும் 31 கால்நடைப் பண்ணைகளின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்ணைகள் மூலம் வருடாந்தம 2 மில்லியன் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தத் தொகையை 10மில்லியன் லீற்றராக அதிகரிப்பதே இந்தத்திட்டததின நோககமாகும். இதில் ஆர்வமுள்ள பணணையாளர்களுக்கு கடன் அடிப்படையில் புதிய இன கறவைப பசுக்களையும சபை வழங்குகின்றது. (து-9)

## இன்று ஒரு தகவல்

# ஆறாவது அறிவு

வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவர் வந்தார். மிகவும் மனம் நொந்து போய் பேசினார். "இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்ததை விட மாடாகப் பிறந்திருக்கலாம் சார்" என்றார். "திடீரென்று வந்து இப்படிச் சொன்னால் எப்படி சார்?" என்றேன். "இப்போது தான் சார் அந்த ஞானோதயமே எனக்கு வந்தது" என்றார்.

"அதற்கு என்ன காரணம்?"என்றேன். " என் மகனுக்கு வேலை தேடுகிறேன் கிடைக்கவில்லை... பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிறேன் கிடைக்கவில்லை... வீடுகட்ட கடன் கேட்கிறேன் கிடைக்க வில்லை. மாடாகப் பிறந்திருந்தால் இதுபோன்ற கவலைகள் கிடையாது அல்லவா? பேசாமல் வைக்கோலைத் தின்றுவிட்டு அசைபோட்டுக்கொண்டே படுத்திருக்கலாம் அல்லவா?" என்றார்.

அதன் பின்பு தான் அவர் சொன்ன விடயத்தை நானும் கொஞ்சம் அசைபோட ஆரம்பித்தேன். மனதிற்குள் இயற்கையைப் பொறுத்தவரை அது நாம் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறது. விலங்குகள், பறவை கள், தாவரங்கள் மற்ற உயிரினங்கள் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும் என்பது தான் இயற்கையின் விருப்பம். இயற்கை அமைப்பை உண்மையாகப் புரிந்துகொண்டால் அது விளங்கும். இருந்தாலும் இந்த ஆள் சொன்னதைக் கேட்ட பின்பு தான் ஒரு முக்கியமான விஷயம் தெரிந்தது.

இந்த உலகத்தில் முக்கியமான ஆறு பிரச்சினைகள் உண்டு. அந்த ஆறு பிரச்சினைகளும் ஆடு,மாடு,செடி, கொடிகளுக்கு இல்லை. ஆனால் மனிதன் அந்தப் பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அந்த ஆறு பிரச்சினைகள் என்னென்ன தெரியுமா? முதலில் ஆடு,மாடுகள் நமக்கென்று சொந்தமாக ஒரு வீடு இல்லையே என்று கவலைப் பட்டுக் கொண்டு உட்கார்ந்திருப் பதில்லை. ஆனால் மனிதனுக்கு வீடு தேவைப்படுகிறது.

இரண்டாவது ஆடைப் பிரச்சினை. ஒரு கோழி இருக்கிறது. அது என்ன "நமக்கு போட்டுக்கொள்வதற்கு ஒரு சட்டை இல்லை" என்றா கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்? ஆனால் மனிதனுக்கு அந்தப் பிரச்சினை உண்டு! மூன்றாவது கல்விப் பிரச்சினை. ஒரு பசு மாடு கவலையாக நின்று கொண்டிருக்கிறது. நீங்கள் போய் "ஏன் பசுமாடே, கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்கிறீர்கள். "என் கன்றுக் குட்டிக்கு முதலாம் தரத்தில் இடம்கிடைக்க வில்லை. கையில் பணமும் இல்லை டொனேசன் கொடுப்பதற்கு சிபாரிசுக்கு யாரைப் பிடிப்பதென்றும் தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டிருக்குமா? அதற்கு அந்தக் கவலையெல்லாம் கிடையாது. ஆனால் மனிதனுக்கு அந்தக் கவலை உண்டு.

நான்காவது வேலைவாய்ப்புப் பிரச்சினை. வேலை கிடைக்க வில்லையே என்று வேப்பமரம் கவலைப்படுவதில்லை. ஆனால் மனிதன் கவலைப்படுகிறான். ஐந்தாவது கல்யாணப் பிரச்சினை. எரு மைமாடு பசுமாடெல்லாம் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடியா அலைகிறது? பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கிறதா? ஆறாவது பணம் சம்பந்தமான பிரச்சினை.

ஆடு மாடெல்லாம் பணத்தைச் சேமிக்கவேண்டும் என்றோ எதிலாவது முதலீடு செய்யவேண்டும் என்றோ நினைப்பதில்லை. பணத்தை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையும் அவற்றிற்கு இல்லை. குதிரை குளம்போடு பிறக்கிறது. காடு மேடெல் லாம் கவலையின்றித் திரியலாம். ஆடு உடலில் ரோமத்துடன் பிறக்கிறது குளிரைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். ஆனால் மனிதன் மட்டும் தான் ஒன்றுமில்லாமல் பிறக்கிறான். ஏன் இந்தப் பாகுபாடு?

இதை ஒரு பெரியவரிடம் கேட்டேன். அவர் இதற்குப் பதில் சொன்னார் எப்படித் தெரியுமா? அவர் இதே கேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். அதற்கு இயற்கை பதில் கூறியதாம் "வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவான கருவியை மனிதனுக்கு கொடுத்திருக்கிறேனே. அந்தக் கருவியை உபயோகப்படுத்தி அந்த ஆறு பிரச்சினையை மட்டுமல்ல ஆறு கோடிப் பிரச்சினைகள் இருந்தா லும் அதைச் சமாளிக்கலாம். அது தான் ஆறாவது அறிவு. அதை உபயோகப்படுத்தினால் காலுக்குச் செருப்பு தயார் செய்து கொள்ளலாம். குளிருக்குப் போர்வை தயார் செய்து கொள்ளலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இதுதான் இயற்கையின் பதில்.

அதனால் நாம் செய்யவேண்டிய முதற்காரியம் இயற்கையை சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் நாம் இப்போது எந்த அளவுக்கு அதை சரியாகப் புரிந்து கொள்கிறோம்? இயற் கையின் படைப்பை நாம் சரியாகப் புரிந்து கொள்வதில்லையே சார். இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

நகரத்தில் இருந்து ஒருவன் கிராமத்திற்கு வந்தான். "ஆகா! எவ்வளவு அழகான பசு...! இயற்கையின் படைப்பு ! அது சரி இதற் கெல்லாம் ஏன் கொம்பில்லை?" என்று கேட்டான். அதற்கு அங் கிருந்த ஒருவர் பதில் சொல்கிறார் "பசு மாட்டுக்கு கொம்பு இல்லாத தற்குப் பல காரணங்கள் உண்டு. கன்றுக்குட்டியாக இருந்தால் கொம்பு இருக்காது. பசு வளர்ந்து பெரிதான பின்பு தான் கொம்பு முளைக்கும் என்பது ஒரு காரணம். சில சமயம் வளரும் கொம்பை எடுத்து விடுவதும் உண்டு அதுவும் ஒரு காரணம். ஆனால் இதற்கு ஏன் கொம்பு இல்லை என்றால் அதற்குக் காரணம் அது பசு இல்லை குதிரை" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

பொதுக்கட்டமைப்பில்

# முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கு சிங்களப் பேரினவாதிகளின் சதியே காரணம்

-பஷீர் சேகுதாவுத்

(ஏறாவூர்)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களுக்கு நியாயம் கிடைக்காமல் போனமைக்கு சிங்களப் பேரினவாத சக்திகளின் சதி முயற்சியே காரணம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கு தமிழர் தரப்பு எவ்விதத்திலும் காரணமில்லையென்று ஏறாவூரில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு முஸ்லிம்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இவ் ஒப்பந்த ஆவணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னைச் சந்தித்த தமது முஸ்லிம் அமைச்சர்களிடம் உறுதியளித்திருந்தார்.

அவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை ஜனாதிபதி மீறிவிட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு வாக்குறுதியளிப்பதற்கும் மறுகணமே அதனை மீறுவதற்கும் தமிழர் தரப்பு எவ்விதமான பங்களிப்பினையும் செய்யவில்லை. பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை தமிழர் தரப்பு ஒன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இது தொடர்பாக முஸ்லிம் மக்களின் மனக்குறைகளை ஆராய்ந்து பார்க்கின்ற மனப்பக்குவம் தமிழ் அரசியல் சக்திகளுக்கு வரவேண்டும்.

முஸ்லிம்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகளை வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு எதிப்பது தான் தமது கனவு என்று எண்ணி செயற்படக் கூடாது என அவர் கேட்டுக்கொண்டார்.

(ச-4)

---

# பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு அணிக்கு ஆட்சேர்க்க அழைக்கும் ஜே.வி.பி

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு அணியில் முஸ்லிம்களும் இணைய வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், இலங்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்டோர் பிளவுபடுத்த பௌத்த பிக்குகள் அனுமதிக்கக் கூடாது என்றார்.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கங்களை விவரித்த அவர், இப் பொதுக்கட்டமைப்பானது தமிழீழ விடுதலைப் புலிகள் விமானதளம் அமைக்கவும்,தமிழர் பிரதேசங்களில் கடற்பரப்பை நிர்வகிக்கவுமே உதவும். இது தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத் தனியரசு இலட்சியத்துக்கே பயன்படும் என்று கூறினார்.

முஸ்லிம் மக்களிடத்தில் வன்முறையைத் தூண்டிவிடும் வகையில் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தனி நாடு கோரி ஆயுதமேந்திப் போராடும் சூழ்நிலை ஏற்படும் என்றார்.

இக் கருத்தரங்கில் பேசிய ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட தரப்பினர் தம்முடன் இணைய வேண்டும் என்றார்.

பொதுக்கட்டமைப்பை விமர்சித்து வரும் அமைச்சர் மங்களசமரவீர உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் தமது போராட்டங்களில் பங்கேற்க முன்வர வேண்டும் என்று ரில்வின் சில்வா அழைப்பு விடுத்தார்.

(ர)

---

# அடுத்து செய்யவேண்டுவதென்ன மக்கள் தீர்மானிக்க வேண்டும்

## நூல் வெளியீட்டில் புதுவை

(கொழும்பு)

தமிழீழம், சமஷ்டி ஆட்சி பின்னர் இடைக்கால நிர்வாகம் எனக் கோரப்பட்டு இன்று பொதுக்கட்டமைப்பு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் இனித் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ன செய்ய வேண்டும் என்று தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலை தோன்றியிருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் புதுவை இரத்தினதுரை எழுதிய "பூவரசம் வேலிகளும் புலுனிக்குஞ்சுகளும்" என்ற புத்தக வெளியீட்டில் பதிலுரை வழங்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை தமிழீழ தேசியக் கொடி ஏற்றினார்.

வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் நடந்த இவ்விழாவில் புலிகளின் கொடியேற்றப்பட்டது தொடர்பாக இராணுவத்தினரும் காவல்துறையினரும் புகைப்படம் பிடித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டதையடுத்து அவர்களும் வந்து புகைப்படம் எடுத்துச் சென்றார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

(அ-7)

---

# குவைத் நட்ட ஈடு இறுதிக் கட்டக்கொடுப்பனவு

(கொழும்பு)

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற குவைத் யுத்தத்தின் காரணமாக நாடு திரும்பி இலங்கை வர்த்தக வங்கிகளில் பழைய குவைத் டினார்களை வைப்பிலிட்டவர்களுக்கு இறுதிக்கட்ட நட்டஈட்டுக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை மத்திய வங்கி மேற்கொண்டு வருவதாக வங்கியின் நிதித்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பணிப்புரைக்கு அமைய இதற்கு முன்னராக மூன்று கட்டங்களாக இந்தக் கொடுப்பனவுகளை வர்த்தக வங்கிகள் வழங்கியிருந்தது.

குவைத் டினாரின் அப்போதைய பெறுமதிக்கு ஏற்ப 1990ஆம் ஆண்டு ஒரு டினாருக்கு 26ரூபா 25 சதமும் 1991ஆண்டில் 27 ரூபா 59சதமும் 2001ஆம் ஆண்டில் 184ரூபா 32 சதமும் என்ற ரீதியில் வழங்கப்பட்டுள்ளன.

வர்த்தக வங்கிகளில் குவைத் டினார்களை வைப்பிலிட்டமைக்கான அத்தாட்சிகளைக் கொண்டிருந்த போதிலும் முதல் மூன்று கட்டங்களில் முழுத்தொகைகளையும் பெறத் தவறியவர்கள் எஞ்சிய தொகையை மத்திய வங்கி ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்படுகின்றது.

முதல் மூன்று கட்டங்களில் பகுதி அளவில் நட்ட ஈடுகளைப் பெற்றவர்கள் எஞ்சிய தொகையை பெற்றுக்கொள்வதற்கு தலைவர், குவைத் டினார் நட்ட ஈட்டுக்குழு, நிதித்திணைக்களம், 4ஆவது கோபுரம், 10ஆம் மாடி, இலங்கை மத்திய வங்கி,இலக்கம்-30 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு -1 என்ற முகவரிக்கு யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு இலங்கை மத்திய வங்கி கோரியுள்ளது.

உரிய ஆவணங்களுடன் இதற்கு தகுதி வாய்ந்தவர்களுக்கான மிகுதி நட்ட ஈட்டுக்கொடுப்பனவு இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய குவைத் டினார்கள் நாணயத்திற்கான இறுதிக் கொடுப்பனவாக அமைவதால் தகுதி வாய்ந்தவர்கள் அனைவரும் எதிர்வரும் யூலை 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அதற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்றும் இலங்கை மத்திய வங்கி மேலும் அறிவித்துள்ளது.(அ-9)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

26

டாக்டரின் அறையில் இருந்து திரு.ஏ.என்.எஸ். திருச்செல்வம் வெளியே வந்ததும் பத்திரிகை அலுவலகங்களுக்குச் செல்வதற்காக பஸ் ஏறினோம்.

## பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு

தினமணி அலுவலகத்திற்குச் சென்ற எனக்கு திரு.ரங்கராஜனிடம் இருந்து அறிவித்தல் கிடைத்தது. அன்றைய தினம் மாலை நான்கு மணியளவில் பூந்தமல்லியிலுள்ள சவீதா பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவுக்குச் செல்லுமாறும், அது தொடர்பில் செய்தியாளர் திரு.குமரனைச் சந்திக்குமாறும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழகத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவைப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்வடைந்தேன். அந்த மகிழ்ச்சி என்னை உற்சாகப்படுத்த செய்தியாளர் திரு.குமரனைச் சந்தித்தேன். தினமணி அலுவலகத்திலிருந்து பூந்தமல்லி நீண்ட தூரம் என்பதால் பிற்பகல் 2.30 மணியளவில் வாகனத்தில் செல்லலாமென அவர் கூறினார்.

வாகனம் தயாரானதும் எனக்குச் செய்தி அனுப்புவதாகவும் கூறியிருந்தார். அவரின் செய்திக்காக தினமணியின் ஆசிரியர் பீடத்தில் காத்திருந்தேன். பற்பகல் 2.30 மணி கடந்தாகிய போதிலும், திரு.குமரனிடம் இருந்து தகவல் வருவதாக இல்லை. குறித்த நேரத்திற்குத் தகவல் கிடைக்காததனால் எல்லோருக்கும் பொதுவாக இருக்கக் கூடிய மறதி அவருக்கும் இருக்கலாமோ... என்ற நினைப்பில் ஆசிரிய பீடத்தின் கதவு திறக்கப்படும் ஒவ்வொரு தடவையும் குமரனா... குமரனா என்று என் உள்மனம் உளறிக் கொண்டது.

என் உள்ளத்து அந்தரத்தைக் கண்டு அந்தக் கந்தப்பெருமான் கக்களம் கட்டிச் சிரித்திருப்பான்.

டேய், விஜய..., குமரா... குமரா... என்று என் நாமத்தைக் கூற அலுப்புப்பட்ட நீ, இப்போது பார்த்தாயா? ஆசிரிய பீடத்திலிருந்து உன் அகமனம் அந்தரப்படுவதை. இதற்குத் தான் சொல்வது இறை நாம உச்சரிப்பும், தெய்வசிந்தையும் வேண்டுமென்று. அந்தக் குமரக் கடவுள் கூறுவதுபோல என் அகமனம் உணர்ந்து கொண்டது.

குளிககச் சென்ற தன் தந்தையைக் காணாத சம்பந்தக் குழந்தை 'அம்மையே அப்பா...' என்று அலறிய நிலையே என் நிலையும்.

அந்த மனநிலைக்கு ஒப்பாக இந்த வயதில் தினமணியின் ஆசிரிய பீடத்தில் இருந்தேன். நேரம் 3.00 ஆகியிருக்கும்.

ஒளவையே! என்று அழைத்த குமரக்கடவுள் போல், நவீன மொழியில் ஹலோ!... என்ற குரலோசை. செய்தயாளர் குமரனின் நாவில் இருந்து வர அளவு கடந்த ஆனந்தத்தில் அவர் பின் தொடர்ந்தேன். நேரம் கடந்து விட்டதென்பதை உணர்த்துவதற்காக கெதியா வாங்க சார் நேரமாச்சு...

## பட்டமளிப்பு பார்க்கும் வாய்ப்பு

3.00 மணியைத் தாண்டுவதற்காக கடிகாரம் வேகமெடுக்க என் இதயத்தின் அறைக் கதவுகளும் சோளகக் காற்றுக்கு அடிபடும் ஜன்னல் கதவுகள் போல படபடத்தன. என் சின்ன வயதில், நல்லூர் முருகன் ஆலயத் திருவிழாவிற்கு உறவினர்களுடன் செல்வது வழக்கம். சிறுவர்களை நல்லூர்த் திருவிழாவிற்குக் கூட்டிச் செல்வதென்றால் செம்மணிப் பயணம் பரவாயில்லையென்று இப்போது நான் நினைப்பதுண்டு. நான் இப்போது நினைப்பதை அவர்கள் அப்போதே உணர்ந்துவிட்டார்கள் போலும். ஆறுமுகசுவாமி வாசலில் என்னை இருத்தி விட்டு அவர்கள் சுற்றிக் கும்பிடச் சென்றுவிடுவார்கள்.

அடிஅழித்து, அர்ச்சனை செய்து என்னிடம் வருவதற்கு எவ்வளவு நேரமாகும்! அதுவரை என்மனம் படும் பாட்டைச் சொல்வதற்கு வார்த்தையில்லை.

குமரன் கூறிக்கொண்டே வேகமெடுக்க, நான் மட்டும் என்னவாம், அவர் பின் செல்லும் அடியாராகி அவரோடு காரில் ஏறிக்கொண்டேன். எங்களோடு தினமணியின் புகைப்படப்பிடிப்பாளரும் கூடவே வந்தார்.

### ஈழத்தமிழர்களிடம் உயர்ந்த மதிப்பு

கார் தினமணி அலுவலகத்திலிருந்து புறப்பட்டதும் காரில் இருந்த புகைப்படப்பிடிப்பாளருக்கு குமரன் என்னை அறிமுகம் செய்துவைத்தார்.

அறிமுகத்தின் அங்கீகாரமாக நானும், புகைப்படப் பிடிப்பாளரும் கைலாகுகொடுத்தோம். அம்மட்டும் தான். படப்பிடிப்பாளர் மௌனமாகவே இருந்தார். பார்வைக்குச் சற்று கடினமானவராக இருந்தாலும் மௌனம் அவரின் சுபாவம் என்பதை பயணத்தின் முடிவில் உணர்ந்து கொண்டேன்.

பயண நேரத்தில் செய்தியாளர் குமரன் என்னோடு கதைத்தார். ஈழத் தமிழர்களின் தற்போதைய நிலை எப்படி? அவரின் கேள்வி ஈழத்தமிழர்கள் மீது அவர்கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகக் கருதப்படவேண்டியது.

தமிழர்கள் என்றால் அவர்கள் ஈழத்தில்தான் இருக்கிறார்கள் என்று நினைத்தோம். ஈழப்போராட்டத்தின் ஒவ்வொரு வெற்றிப்படிகளையும் வெடிகொளுத்திக் கொண்டாடியவர்கள் தமிழக மக்கள்... இவ்வாறு கூறியவர் திடீரென மௌனத்தைக்கடைப்பிடித்தார்.

அவரின் மௌனத்திற்கான காரணத்தை அறிவதற்காக அவர் முகம் நோக்கினேன். என்பார்வையை குறிப்பால் உணர்ந்தவர் போல், இப்போதெல்லாம் அந்த மனநிலை தமிழக மக்களிடம் இல்லாமல் போயிற்று. என்ன செய்வது... எல்லாம் துரதிஷ்டம் பெருமூச்சோடு மீண்டும் மௌனமாகினார்.

சென்னை வாழ் தமிழ்மக்களின் பேச்சுமொழியை உணர்ந்து கொள்வதில் நான் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்துள்ளேன். ஆனால் செய்தியாளர் குமரன் தூய தமிழில் அழகாகப் பேசினார். அவரின் ஒவ்வொரு சொற்பதங்களும் மிகத் தெளிவானதாக இருந்தன. கலைஞர் கருணாநிதி, வை.கோபாலசாமி போன்று தமிழ் உச்சரிப்பு. அந்தத் தெளிவான பேச்சுகளுள் இருக்கக் கூடிய ஈழத்தமிழர்கள் மீதான மதிப்பு, தமிழ்ப்பற்று இவற்றைக்கண்டு உண்மையிலேயே நான் நெகிழ்ந்து போனேன். (வளரும்)

என்.விஜயன்

# ஜே.வி.பியின் பேச்சுகளுக்கு முக்கியத்துவம் ஏன் கவலைப்படுகிறார் மூத்த அமைச்சர் டி.எம் ஜெயரட்ண

(கொழும்பு)

ஜே.விபியின் அண்மைய போராட்டங்களை எதிர்கொண்ட மக்கள் வன்முறைக் கலாசாரத்தை ஜே.வி.பி. இன்னமும் கைவிடவில்லை என எண்ணுவதாக மூத்த அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் ஜே.வி.பியினால் நடத்தப்பட்ட போராட்டங்களால் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி உள்ளனர். ஜே.வி.பியின் தற்போதைய நடவடிக்கைகள அதன் 1988 - 89 கால கோர முகத்தை நினைவுகூறுகின்றன. தங்கள் வன்முறைப் பாதையிலிருந்து இன்னும் ஜே.வி.பி மாறவில்லை என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நாட்டின் இளைஞர்களை தனது சொந்த அரசியல் இலாபங்களுக்காக கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கும் குண்டாந்தடி பிரயோகங்களுக்கும் ஜே.வி.பி பயன்படுத்தி வருகிறது. கலாசாரத்தின் பெயராலும் வரலாற்றின் பெயராலும் இளைஞர்களை மூளைச் சலவை செய்து வருகிறது.

நாட்டு மக்களில் சிலர் அரசியல் வாதிகளின் இந்தப் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது வருத்தம் தருகிறது. ஆயுதமேந்திய ஜே.வி.பியினர் இன்று ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியிருக்கிறார்கள. அதேபோல ஆயுதம் தாங்கிய குழுக்கள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்புவதை சந்தேகத்துடன பார்ப்பதற்கு எந்தவித காரணமுமில்லை எனத் தெரிவித்தார்.(அ-4)

# மேல் மாகாண மக்கள் முன்னணி ஏற்பாட்டில் இனவாதத்துக்கு எதிராகப் போராட்டம்

இனவாதத்துக்கு எதிராக நேற்று முன்தினம் ஐந்துலாம்புச் சந்தியில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இப் போராட்டத்துக்கு மேல்மாகாண மக்கள் முன்னணி ஏற்பாடுகளைச் செய்திருந்தது. பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதை அடுத்து இனவாத அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இன்றைய போராட்டம் நடாத்தப்படுவதாக மேல்மாகாண மக்கள் முன்னணியின் உபதலைவர் குமரகுருபரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க பொதுக கட்டமைப்பை ஏற்படுத்தியிருப்பதற்கு வரவேற்பு தெரிவித்தும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் மலையகம் முழுவதும் பணிப்புறக் கணிப்புக்களிலும், பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டதாக அதன் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

(அ-7)

# புதிய சம்பள சுற்று நிருபத்திற்கமைய உடனடி நடவடிக்கை எடுக்க கோருகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பள சுற்றுநிருபம் அனுப்பப்பட்டு ஒரு மாதம் நிறைவுபெற்றுள்ள வேளையிலும் சில வலயக்கல்விப் பணிமனையினால் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கும், சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கும் இது தொடர்பான படிவங்கள் வழங்கப்படவில்லை என அறியப்படுகிறது.

நேற்றுத்தொடக்கம் வலிகாமம் கல்விவலயத்தினால் இப்படிவம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் 94 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதிக்குப் பின் ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறியவர்களும் தற்போது ஆசிரிய சேவையில் கடமையாற்றி வருபவர்களும் வலயக் கல்வி அலுவலகங்களில் இப் படிவத்தைப பெற்று நிரப்பிக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஒவ்வொரு வலயக் கல்விப்பணிமனையிலும் புதிய சம்பள சுற்றறிக்கை வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கும்படி கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லிடம இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-9)

## மாதாந்தக் கூட்டம்

(கல்வியங்காடு)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த கூட்டம் இணையத் தலைமை காரியாலயத்தில் இன்று காலை 10.30 மணிக்கு இணையத்தின் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

(அ-74)

# வாகனம் கைப்பற்றல் மற்றும் விற்பனையில் மோசடி சந்தேகநபர் இருவர் மோசடிப் பிரிவால் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை தயாரித்து மோசடியான முறையில் வாகனங்களை கைப்பற்றி விற்பனை செய்து வந்த பிரதான சந்தேக நபர்களில் இருவர் கொழும்பு மோசடி பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு விற்பனை செய்த 60 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியுடைய 4 வாகனங்கள் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளதாக மோசடி விசாரணைப் பிரிவின் சிரேஷட பொலிஸ் அத்தியட்சகர் எச்.எஸ்.பிரிதிய தெரிவித்துள்ளார்.

தவணைக் குத்தகை செலுத்தப்படவில்லை என்று போலி ஆவணங்களைத் தயாரித்து கைப்பற்றிய வாகனங்களை விற்பனை செயதுள்ளதாக தெரிவிக்கப்படுகினறது.

இந்த வாகனங்களுக்கு விபத்துக்குள்ளான ஏனைய வாகனங்களின் சட்டகம் மற்றும் இயந்திர இலக்கங்களை பதிவு செய்து விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய மேலும் பல சந்தேக நபர்களை கைது செய்வதற்கும் வாகனங்களை கைப்பற்றுவதற்குமான விசாரணைகள் நடைபெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-9)

# சனிப் பெயர்ச்சி

## உங்களுக்கு எப்படி?

**27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கடைப்பிடிக்க வேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.**

## கும்பம்

*பல்வேறு காரியங்களை ரகசியமாக செயல்படுத்தும் ஆற்றல் பெற்ற கும்ப ராசி நேயர்களே!*

உங்களுக்கு உங்கள் ராசியாதிபதி சனி வாக்கிய சித்தாந்தப்படிவரும் 27.06.2005முதல் 05.08.2007 முடிய ருணரோக ஸ்தானமான 6-ம் வீட்டில் உலாவ உள்ளார். சனி 6ல் சஞ்சரிக்க உள்ளதால் சமுதாயத்தில் உங்களின் நிலைப்பாடு பிரகாசமாக இருக்கும். மற்றவர்கள் செய்த சூழ்ச்சிகள் எல்லாம் வெளிவந்து உங்களின் உயர்வு அற்புதமாக இருக்கும். வழக்கு வம்புகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடிவது மட்டுமன்றி எதிராளிக்கு பெருத்த நஷ்டத்தினைத் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்டநாட்களாக கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை மொத்தமாக கிடைத்து அதன் மூலம் பொருள்வரவு உண்டாகும். சனி சஞ்சாரம் மட்டுமன்றி வருடக் கோளான குருபகவான் 9-ம் வீட்டில் 19.09.2005முதல் 20.10.2006 முடிய சஞ்சாரம் செய்ய உள்ளதால் இந்தக் காலங்களில் உங்களின் பொருளாதார நிலை மிகச் சிறந்த நிலையினை எட்டும். சர்ப்ப கிரகமான ராகு கேது உங்கள் ராசிக்கு அசாதாரண சூழ்நிலையில் சஞ்சரிக்க உள்ளதால் குடும்பத்தில் ஒற்றுமை குறையும். தொழில் நிமித்தமாக பல்வேறு வெற்றிகள் குவிந்தாலும். குடும்பத்தில் தேவையில்லாத பிரச்சினைகள் சில ஏற்படும். நீண்டநாளைய கடன்கள் கூட பைசலாகி உங்களின் பண பலம் உயரும்.

**உடல்ஆரோக்கியம்:** உடல் நலத்தில் இதுவரையிலும் நிலவிய கஷ்டங்களும், சோதனைகளும் விலகி மிகவும் ஆரோக்கியமான நிலையால் பலமும் வலிமையும் புதுத் தெம்புடனும் காட்சியளிப்பீர்கள். எதிரிகளின் பலம் குறைந்து நட்பாக மாறுவார்கள். மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் மிகவும் அற்புதமாக இருக்கும். பிள்ளைகளால் நல்ல அனுகூலப் பலனும் சுபீட்சமும் உண்டாகும். மருத்துவச் செலவுகள் அலைச்சல் மறையும். மனம் தெளிவடையும்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல்கள் எல்லாம் விலகி மிகவும் அற்புதமான அனுகூலப்பலனையும் வெற்றிகளைக் குவித்திடுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பும் ஆதரவும் பிரமாதமாகவே அமையும். வம்பு, வழக்குகளும் விலகிவிடும். பூர்வீகச் சொத்தும் அசையாச் சொத்து, பொன்பொருள், வீடு,வண்டி வாகன சேர்க்கையால் பிரமாதமான நற்பலன்களையும் அரசுமூலம் அனுகூலப் பலனையும் அடைவீர்கள்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபாரத்தில் அற்புதமான ஏற்றமும் அபிவிருத்தியையும் அடைவீர்கள். புதிய தொழிலை தொடங்குவது பெரிய முதலீடுகளால் வியாபாரத்தை வெளியூர் வெளிநாட்டிலும் அபிவிருத்தி செய்து பிரமாதமான இலாபப் பலனை அடைவீர்கள். மளமளவென உற்பத்தி பெருகி விற்றுத் தீரும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளிடம் பிரமாதமான நம்பிக்கை நாணயம் உருவாகி சிறப்பாக செயல்படுவீர்கள். போட்டி பொறாமைகள் ஓடிமறையும். கமிஷன், ஏஜென்ஸி அற்புதமாக நடைபெறும்.

**உத்தியோகஸ்தர்களுக்கு :** உத்தியோக நிலையில் சில ஆண்டுகளாக தடைப்பட்ட பதவி ஊதிய உயர்வுகளை இக்காலத்தில் பெற்று அனைவராலும் பாராட்டப்படப் போகிறீர்கள். சிலருக்கு கௌரவம் தரும் அதிகாரமுள்ள பொறுப்பான பதவியும் கிட்டும். இடமாறுதல் உண்டாகி பிரிந்த குடும்பத்தாருடன் ஒன்றுசேரும் அமைப்பும் மனமகிழ்ச்சி தரும். படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை வாய்ப்பினையும் நிரந்தரமான பணியினையும் கண்டிப்பாக இக்காலத்தில் அடைவீர்கள்.

**பெண்களுக்கு:** நீங்கள் முன்பைவிட சுறுசுறுப்பாக செயல்படப் போகிறீர்கள். உடல்நலம் அற்புதமாக இருக்கும். தடைப்பட்ட புத்திர பாக்கியம் அமையப் பெறும். கணவன் மனைவி இடையில் அற்புதமான அன்னியோன்யமும் அன்பும் நிலவும். கணவன் வீட்டு சொந்த பந்தங்கள் உதவிகரமாக அமைவார்கள். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் தற்போது தடபுடலாக நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு குறைந்துவிடும். ஊதிய உயர்வு பணி நிரந்தரமும் கிட்டும். புதிய வேலை தேடுபவர்களுக்கு உடனே வேலை கிட்டும்.

**மாணவ மாணவியருக்கு:** கல்வியிலும் மற்றும் கணணி, விளையாட்டுத்துறைகளில் பிரமாதமாக வெற்றிகளைக் குவித்திடுவீர்கள். நல்ல நண்பர்கள் சேருவார்கள். பகைவரும் கூட உங்களிடம் நட்பாக மாறுவார்கள். உங்களது முயற்சிகளில் பிரமாதமான வெற்றிகிட்டும். சாரண இயக்க மாணவர்களுக்கு அரசு மூலம் கௌரவம் பாராட்டும் பரிசும் கிட்டும். மருத்துவம் மற்றும் கணனியில் புதிய கண்டுபிடிப்புகளால் பாராட்டப்படுவீர்கள். அரசு உதவிகள் சிறப்பாக அமையும்.

**கலைஞர்களுக்கு:** புதிய புதிய அற்புதமான வாய்ப்புகளைப் பெற்று சிறப்பாக பெயர், புகழ், செல்வம் செல்வாக்கினைப் பெறுவீர்கள். பலதரப்பட்ட பாத்திரங்களையும் ஏற்று உங்களது திறமைகளை நிரூபிப்பீர்கள். படவரிசைகள் கைவசம் அதிகரிக்கும். அரசு மூலம் பாராட்டும் பரிசும் வாங்கிடும் யோகம் இக்காலத்தில் ஏற்படுவதால் மிகவும் பூரிப்பினை அடைவீர்கள்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் இதுவரை நிலவிய குழப்பங்கள் யாவும் விலகி பிரமாதமான பெயர் புகழைப் பெறுவீர்கள். உங்கள் பேச்சுக்கு அற்புதமான மரியாதையும் மதிப்பும் ஏற்படும். மற்றக் கட்சியினரும் பகையாளிகளும் கூட உங்கள் செயல்களையும் மக்கள் சேவைகளையும் பாராட்டுவார்கள்.

**தொழிலாளர்களுக்கு:** உழைப்பினால் உன்னதமான உயர்வுகளை அடைகின்ற காலமாகவே அமையும். எடுக்கின்ற முயற்சிகள் அனியும். எடுக்கின்ற முயற்சிகள் பிரமாத வெற்றியை ஏற்படுத்தும். முதலாளி, தொழிலாளி உறவு பிரமாதமாக அமையும். நிலுவைத் தொகைகளும் சரியான காலத்தில் வரும். சிலருக்கு வண்டி வாகன யோகம் கிட்டும்.

### சனிபகவான் குரு சாரத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
### 27.06.2005முதல் 21.07.2005வரை

இக்காலத்தில் உங்களுடைய கடந்தகால சோதனைகள் எல்லாம் இருளில் ஒளிரும் விளக்கு எப்படி பிரகாசமாக அமையுமோ அதுபோல துன்பங்கள் விலகி இன்பமயமாகும். உடல்நலம் சிறப்பாக தேறிவிடும். மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் நிம்மதியாக வளமுடன் சபீட்சமான வாழ்வினைப் பெறுவார்கள் நீண்டநாட்களாக தீராமல் இழுத்தடித்த பிரச்சினைகள் கூடத் தீரும். மனம் இலேசாகும். தொழில் வியாபாரம் மிகவும் சிறப்பான அபிவிருத்திகளை சந்தித்து இலாபம் ஏற்படும். உத்தியோக நிலையில் அதிகாரிகள் உடன் ஊழியர்களின் முழு ஆதரவும் அமையப்பெற்று மனமகிழ்ச்சியும் பதவி உயர்வும் வெளியூர்ப் பயண அனுகூலமும் பெறுவீர்கள் திருமண சுபகாரியம் தடபுடலாக நிறைவேறும். மாணவர்களின் கல்வியில் சிறப்பான மதிப்பெண் கிட்டும்.

### சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
### 22.07.2005முதல் 19.11.2005வரை

தேகநிலையில் சுபீட்சமான நிலை உண்டாகி மனதில் உற்சாகம் பொங்கும். மருத்துவச் செலவுகளும் படிப்படியாக விலகிவிடும். புத்திரர்களும் மனைவியும் அற்புதமான பலமும் வளமும் பெறுவதால் பூரிப்பு ஏற்படும். எடுத்தகாரியம் யாவிலும் சிறப்பாக செயல்பட்டு முன்னேற்றப்பலனை அடைவீர்கள். குடும்பத்தில் பொருளாதார நிலை மிக மிக பிரமாதமாக அமையும். கடன்தொல்லைகள் விலகும். பொன்பொருள், வீடு,வண்டி வாகன சேர்க்கை அற்புதமாக அமையும். தொழில் ரீதியாக பிரமாதமான அனுகூலப்பலனை அடைவீர்கள். எதிர்பாராத பணவரவுகளும் ஏற்படும். தொழில் புதிதாக தொடங்குவதும் கூட்டுத்தொழிலில் புதிய சிறப்பான கூட்டாளிகளும் சேருவார்கள். உத்தியோகநிலையில் புதிய வேலைவாய்ப்பு கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு அனைத்து வழியிலும் மேன்மையான பலன்களை அடைகின்ற காலமாகும்.

### சனிபகவான் வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம்
### 20.11.2005முதல் 06.04.2006வரை

ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். குழந்தைகளால் பெருமை உண்டாகும். மருத்துவச் செலவுகள் உண்டாகாது. சேமிப்புப் பெருகும்.சிலர் பங்குபத்திரம் அசையாச் சொத்து வகையிலும் சேமிப்பார்கள். சகோதரர் ஒற்றுமை சிறப்படையும். கணவன் மனைவி ஒற்றுமை மிகப் பிரமாதமுடன் அமையும். உறவினர் நண்பர்களின் ஆதரவுடன் திருமண சுபகாரியத்தினை சிறப்பாக நடத்தி முடித்துவிடுவீர்கள். பொருளாதார நிலை மிகப் பிரமாதமாகும். தொழில் வியாபாரம் மிக அற்புதமான இலாபம் தரும். தொழில்நுட்பக்கருவிகள் வாங்குவது பெரிய முதலீடுகளையும் செய்து கூட்டுத்தொழிலிலும் நிறையச் சம்பாதிப்பீர்கள். உத்தியோக நிலையிலும் உங்களுடைய அறிவாற்றலை அதிகாரிகள் பாராட்டுவார்கள். உயர் பதவிகள் வகித்திடும் உன்னதமான காலமாகவே அமையும். மனதில் பூரிப்பு உண்டாகும்.

### சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
### 07.04.2006 முதல் 27.07.2006வரை

உங்களது மனதில் பூரிப்பினை ஏற்படுத்தும் விதமாக தொடர்ந்து உடல் நலமாகவே அமையும். மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உடல்நலம் சுபீட்சமாக இருக்கும். மருத்துவச் செலவுகள் ஏற்படாது. பொருளாதார நிலை பிரமாதமாக அமையும். கடன்கள் மறையும். கொடுக்கல் வாங்கல் அனுகூலமாகும். பொன்பொருள்சேரும். வண்டிவாகன யோகம் கிட்டும். வம்பு வழக்குகளில் வெற்றி பூர்வீக வழியில் அனுகூலம் உண்டாகும். திருமண சுபகாரியம் அற்புதமாக நடைபெறும்: நீண்டநாட்களாக இல்லாமல் இருந்த புத்திர பாக்கியம் அமையும். தொழில் வியாபாரத்தில் பிரமாதமான இலாபம் உயர்வு உண்டாகும். உத்தியோகத்தில் உயர் பதவிகள் நிலுவைத்தொகை கிடைத்து பலரும் பாராட்டும்படி காரிய செயலை முடிப்பீர்கள். புதிய வேலைவாய்ப்புகளும் கிட்டும். அரசியலில் பெயர், புகழ் கூடும். மாணவர்களின் .கல்வியில் வெற்றியும் சாதனைகளும் அற்புதமாக அமையும்.

### சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
### 28.07.2006 முதல் 02.12.2006வரை

உங்கள் தேக ஆரோக்கியம் வலிமையுடன் அமையும். குடும்பத்தில் மறக்கமுடியாத இனிய சம்பவங்கள் சுபகாரியங்கள் ஆண்புத்திர பாக்கியமும் அமையும். மனைவியும் குழந்தைகளும் சிறப்பாக இருப்பார்கள். சுபீட்சமான நிலையில் குடும்பம் அமையும். மணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும். பெண்களுக்கு உடனடியாக படித்த படிப்பிற்கு ஏற்றவேலை கிட்டும். எதிர்பார்க்கும் காரியம் யாவுமே தடையின்றி வெற்றிதரும். பொன் பொருள் வண்டி வாகனம் ஆடைசேரும். புதிய முயற்சிகளால் புதிய தொழில் தொடங்க வங்கி மூலம் அரச உதவி கிட்டும். நல்ல இலாபமும் பலருக்கு வேலை தரும் அமைப்பும் உண்டாகும். வெளிநாட்டுப்பணி உடன் கிட்டும். விவசாயிகளுக்கு அற்புதமான விளைச்சல் ஏற்படும். கால்நடை பூமியில் யோகம் அமையும். மாணவர்கள் மாவட்ட ரீதியில் சாதனைபுரிந்து பெற்றோர்களைப் பெருமைப்படுத்துவார்கள்.

### சனிபகவான் வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம்
### 03.12.2006முதல் 19.04.2007வரை

இக்காலத்தில் உங்களுக்கு நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது. அதிக சோதனைகளை எதிர்கொள்ளும்படி நேரிடும். உடல்நலம் பித்த சம்பந்தமான நோயால் பாதிக்கும். மனைவி மற்றும் பிள்ளைகளால் மருத்துவச் செலவுகளும் வீண்செலவுகளும் ஏற்படும். கணவன் மனைவி இடையில் சண்டை சச்சரவுகள் உருவாகி மன அமைதி குறையும். உற்றார் உறவினர் நண்பர்களிடம் வாக்குவாதமும் கருத்து வேறுபாடுகளும் உண்டாகும். திருமண சுபகாரிய முயற்சி தடைப்படும். பொருளாதார நிலையில் தனவரவு தடைப்பட்டு கடன் வாங்க நேரிடும். தொழில் வியாபார நிலையில் மந்தமான போக்கும் இலாபம் இல்லாத சூழ்நிலையும் கூட்டுத்தொழில் வியாபாரத்தில் கூட்டாளிகளை அனுசரித்துப் போகமுடியாத சூழ்நிலையும் உண்டாகும். உத்தியோகநிலையில் அதிகாரிகளை தேவையில்லாமல் பகைக்க நேரிடும். மாணவர்களின் கல்வியில் கடுமையான முயற்சி தேவை. விவசாயிகள் பாதிப்படைவார்கள்.

### சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்
### 20.04.2007முதல் 05.08.2007வரை

மனதில் தெம்பும் தன்னம்பிக்கையும் கூடும் காலமாக அமையும். இனபந்துக்களால் அனுகூலமும் ஆதரவும் அமையும். பங்குத் தொழில்ல்களில் உங்களது முயற்சிகளுக்கு சாதகப்பலனும் முயற்சிகளில் வெற்றியும் அமையும். திருமண பேச்சுவார்த்தையும் சிறப்பான வரன் அமையப் பெறும். கணவன் மனைவி உறவு அந்நியோன்யமாக அமையும். புத்திரர் பாக்கியம் கிட்டும். பொருளாதார நிலையில் சிறப்பான எதிர்பாராத பணவரவுகளால் வீடு மனை வண்டி வாகன அமைப்பு பூரிப்பினை ஏற்படுத்தும். கடன் தொல்லைகள் மறையும் கொடுக்கல் வாங்கலில் சாதகப் பலனை அடைவீர்கள். தொழில் வியாபாரநிலையில் மிகச் சிறப்பான இலாபமும் ஏற்றமும் உண்டாகும். உத்தியோக நிலையில் பதவி உயர்வு ஊதிய உயர்வு புதிய நிரந்தர பணியும் கிட்டும். வெளியூர் வெளிநாட்டுப் பயணம் சிறப்பாக அமையும் அனுகூலமும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சாதனை பல புரிந்து பெருமைப்படுவார்கள்.

### அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட கிழமை: சனி,புதன்
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு, நீலம்
அதிர்ஷ்ட தெய்வம்: ஐயப்பன்
அதிர்ஷ்ட திசை: மேற்கு
அதிர்ஷ்ட கல்: நீலக்கல்

(தொடரும்)




## சதியை நீ அறியாயோ?!

சிறகு விரித்துப்
பறக்க முயலும்
பறவைக் குஞ்சே!
வேட்டையாடி - உன்
கூட்டை உடைக்கக்
காத்திருக்கும் கழுகின்
சதியை நீ அறியாயோ...?

கி. குகநாதன்,
பருத்தித்துறை.

## ஓரமாய்ச் செல்!

தாயின் அரவணைப்பிலிருந்து
வெளிவரும் சிறுமியே!
கல்வி கற்று கல்விமானாய்
பெற்றோரைப் பாதுகாத்திட
வீதயோரம் பயணம் செய்யும் நீ!
வஞ்சகர் பார்வையில் அகப்படாமல்
ஓரமாய்ச் செல்! பெண்ணே!
விடியல் உனக்காக காத்திருக்கிறது.

எஸ். கஜசங்கவி,
உடுவில்.

## ஆணுக்குச் சமனாக

அடக்குமுறையில்
அடங்கியிருந்த காலம்
அகன்று மடந்தை
ஆணுக்குச் சமனான காலம்
இதுவென விவேகமுடன்
விரைவாகச் செல்ல சைக்கிளை
தயாராக்கும் நங்கையிவள்!

த.நா.பிள்ளையார், மூளாய்.

## வீதியிலே...

கண்ணாலே பேசிப் பேசி
வீதியிலே இறங்கு முன்னே
ரோஸி கொஞ்சம் யோசி!
டிரக் வண்டி மோதிவிடும்
உன்னைப் பதம் பார்த்து விடும்.

ம. கீதா,
யாழ்ப்பாணம்.

# மௌனத்தின் தேடல்கள் - 62



## நம்பிக்கையுடன் சென்று படி!

புன்னகையுடன்
புறப்படும் பிஞ்சே!
உன் எதிர்கால
விடியல் தெரிகிறது
வதனத்தில்!
நம்பிக்கையுடன்
சென்று படி
உன் வாழ்வு
கனிவது நிச்சயம்!

P.பவானி,
யாழ்ப்பாணம்.

## இது நியாயமா?

சிறுமியே! உனைப்
பெற்றோர்கள் வறுமையிலும்
கல்வி கற்று கல்விமானாக்கிட
கனவுகாண நீயோ
வீதியோரம் நின்று
வீண் தொல்லைகளை
ஏற்படுத்துகிறாயே! ~ இது
நியாயமா? பெண்ணே!

நிகா, உடுவில்.

## பார்த்துப் போ!

பாதையோரம் பயணம் செய்யத்
தயாராகும் சிறுமியே!
பார்த்துப் போ கவனமாய்!
படுவேகமாய் வரும் வாகனம்
பதம் பார்க்கும் உன் உயிரை!

S.நித்தியா, கொக்குவில்.

## கவனம்!

சைக்கிள் சவாரி செய்யும்
பெண்ணே!
படுகுழி வழியில் ஏராளம்
கவனம்!

ந.ஸ்ரீராம், யாழ்ப்பாணம்.

## உன் வரவுக்காய்...

புன்னகை தவழும் முகத்துடன்
பெற்றவர் நம்பிக்கையை நிலைநாட்டி
கல்வி கற்கும் பெண்ணே! - உன்
வளர்பபுத்தாய் அடிமைத் தளையில்...
எப்போது மீட்கப் போகிறாய்...?
உன் வரவுக்காய் காத்திருக்கிறாள்
விரைந்து வா மகளே!

லோ. அபிராமி, பருத்தித்துறை.

# மௌனத்தின் தேடல்கள் - 64



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றும் உள்ளத்து
உணர்வுகளை மிகச்
சிறிய கவிதைகளாக்கித்
தபால் அட்டையில்
வலம்புரி - சங்குநாதத்
திற்கு அனுப்பிவையுங்கள்.
கிடைக்க வேண்டிய
இறுதித் திகதி -
04.07.2005
அனுப்பவேண்டிய
முகவரி:-
மௌனத்தின் தேடல்கள்- 64
வலம்புரி - சங்குநாதம்
இல3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

## நண்பனுக்கு ஓர் மடல்



அன்பு நண்பா!
கொட்டும் பனியில் நீ நனைந்து
கோட்டும் சூட்டும் அணிந்து
வேலைக்குச் செல்வதை அறிந்து
மிக்க துயரடைந்தேன்

முன்னரெல்லாம் நான் நினைத்தேன்
யூ.கே யில் என்ன குறை...?
அள்ளி வரும் காசு அதை எண்ணி
துள்ளி விளையாடலாம் - துயர் போக
தியேட்டரிலே படம் பார்த்து
காலின் மேற் கால் போட்டு
'கால்' 'அரை'யும் அடித்து அது
ஏறிய பின் லேசாகத் தூங்கிடலாம் என்று

ஆனால் நீ ஆங்கே படும் துயரம்
அனுப்புகின்ற காசினிலே
சத்தியமாய்த் தெரிவதில்லை - நண்பா!
வேலைத்துயர் போக மீதி நேரம்
வந்து வீட்டில் நீயாகவே
ஆக்கியுணவுண்பாயாம்
கேட்டேன் - உள்ளுருக முன்னர்
நினைத்தவற்றை எண்ணுகிறேன் இப்போ

கொட்டும் பனியினால் உன் தலை
முடிகளும் கொட்டியதால் வெட்கத்தால்
'போட்டோ'வும் அனுப்பாமல்...
சம்மந்தி வீட்டாரின் குறையும் கேட்டாயாம்

உனை வருத்தி ஊர் வளர்க்கின்றாயா?
வேண்டாம் நண்பா! வந்துவிடு!
தமிழ் அன்னை அழைக்கிறாள்
தாய் மண் உனை வரவேற்கிறது
வந்து விடு நண்பா!

ஜெ. சுபாஷினி, செம்மணி வீதி.

## என் நிலை

நலம் வாழப் பலரை
நான் வாழ்த்துகின்றேன்
நான் வாழ வாழ்த்தும்
மானிடமு முண்டா?

மானமுடன் வாழும்
மங்கையுனைத் தேடி
மனதா லேங்கி
தினமும் துடிப்பேன்

திரும்பும் திசையனைத்தும்
நினைவா யுன்னுருவம் ~ அது
நிம்மதி கொடுப்பதாயல்ல;
நிம்மதி தொலைப்பதாய்...

கிட்டாக் கனிக்கு
கிட்ட இருந்து கொண்டே
ஏங்கும் என் நிலையை
என்னென்று சொல்வது...?

நீ கிடைக்காது போனால்
நிம்மதி தொலைத்து விட்டு
பைத்தியம் போல் தானே
வைத்தியம் தேட வேண்டும்

காதல் கொண்டது
காமம் கொண்டதாலல்லவே
கண்ணே!

கண்ணீர் துடைக்கும்
கரமா யுன் கரமும்
எனை மயக்குமுன் னன்பும்
எனை நாட வைத்தது
என்று மேங்க வைக்குது!

சி. மதியழகன்,
அல்வாய்.

## என் உள்ளக் கூத்தல்



முதன்முறை என் வாழ்வில் முறைத்தவள்
முதலாகவே எனறும் இருந்தவள் - ஆயினும்
முதலிலே மறைந்தும் போனவள் - ஏனோ
முழுதாகவே நினைவில் இணைந்தாள்!

மண்டும் சந்தித்தேன் - என் தேவதையை
என்றும் நினைவுடனே...
அவளுக்கென்னைத் தெரியவில்லை - ஆனால்
எனக்கென்றும் அவளேதான் உயிர்

தேடித் தேடித் தேடித் தொலைந்தேன்
தேடிக் கிடைப்பதில்லை எனத் தெரிந்தாலும்
தேடிப் பார்ப்பதென்ற நினைவுடன்
என் உயிர்மெய்
தேடல் தொடங்கியது - எனக்காக...!

பிறின்ஸ், கியுடெக்.

## மாறும் காலம்



அன்று நீ குழந்தை
நேற்று நீ சிறுமி
இன்று நீ யுவதி
நாளை நீ தாய்
அதை ந அறிவாய் - பெண்ணே!
உன் பருவம்
அடிக்கடி மாறும்.

தி. சாரங்கன்.
கொக்குவில்.

## என்னவனுக்கு....

என்னவனே!
நீ என்னைப் பிரிந்தால் இன்னொருவன்
என்னை - எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்!
அவன் வேறு யாரும் இல்லை
அவன் பெயர் மரணம்.

க. ராஜா, மல்லாகம்.

## பதவி

தகுதியற்றவர் தேடிச்
சென்று மறைந்து நின்று
தம்மைக் காப்பாற்றிக்
கொள்ளும் புகலிடம்!
தகுதியுடையவரைத்
தேடி வந்து
மக்கள் சேவைக்கு வழி
திறந்துவிடும் திறவுகோல்!

## அறிவியல்


மூடநம்பிக்கை எனும்
மூடுபனியை உருக்கிய
பகுத்தறிவுச் சூரியன்:

கி. குகநாதன்.







இந்திய - இலங்கை இராணுவ ஒத் துழைப்பு ஒப்பந்தத தை எதிர்த்து நேற்று முன்தினம் சென்னையில் தமிழர் விடுதலை ஆதாரவாளர்கள் பாரிய உண்ணாநிலை அறப்போரில் ஈடுபட்ட னர். சென்னை தமிழ்நாடு அரசு விருந் தினர் மாளிகை எதிரே இப் போராட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வுக் காட்சி களைப் படங்களில் காணலாம்.

# வடமராட்சிப் பகுதியில் சுகாதாரம் பேணும் பணி

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் உள்ள தேநீர க கடைகள், உணவகங்கள், பேக்கரிகள் மீது சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கையைப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதி காரி பணிமனையினர் மேற்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை, நெல்லியடி, மந்திகை, உடுப்பிட்டி, தொண்டமனாறு, வல்வெட்டித் துறை ஆகிய இடங்களிலுள்ள வியாபார நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற் கொண்டு சுகாதாரம் பேணப்படாத பொருட் களை அழிப்பதுடன், சுகாதாரம் பேணப் படாத உணவகங்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு முரணான வகையில் உண வகங்களை மூட உத்தரவிட்டும் மூடாது செயற்படும் உணவகங்கள் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் சுகாதார பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

(அ-35)

# ஒரே நாளில் 3 தீ விபத்துக்கள்

கொழும்பு மற்றும் நர் கொழும்பு பகு தியில் கடந்த திங்கட்கிழமை இரவும் நேற்று முன்தினம் அதிகாலையும் மூன்று தீவிபத துக்கள் இடம்பெற்றுள்ளன.

நிகம்புவை தொழிற்சாலை ஒன்றினரு கில் திங்கட்கிழமை இரவு 10.30 மணியள வில் தீவிபத்து இடம்பெற்றுள்ளது. இந்தத் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர 8 தீய ணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக தீயணைபபுப் படையினர் தெரிவத்துள்ளனர்.

இத் தீயினால் தொழிற்சாலைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அதி காலை 2.30 மணியளவில் பம்பலப்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம ஒன்றும், 3.20 மணியளவில் கிரிபத் பிரதேசத் தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றும் தீப்பிடித்து எரிந்துள்ளன. தீயணைப்புப் படை யினர் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-2)

# நாட்டின் நிலை குறித்து சபாநாயகர் கவலை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தோடு கலா ச்சாரமும் சீர்குலைந்துள்ளதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார கவலை தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் கலாசாரத்தைக் கட டியெ ழுபபுவதற்கு குரல் எழுப்பவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

டி.ஆர்.வஜயவர்த்தன ஞாபகார்த்த விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே சபாநாயகர் இதனைத் தெரி வித்தார்.

(து-9)

# முகாமைத்துவ கட்டமைப்புக்கு அரசியல் கட்சிகள் வரவேற்பு

சுனாமிக்குப் பின்னரான் நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு உருவாக்கிய மையை தமது கட்சி ஆதரிக்கின்றது என்று மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

அதன் மத்திய குழு இந்த முடிவை எடுத துள்ளதாக அந்தக் கட்சியினால் வெளி யிடப்பட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

தற்போது வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத திற்குப் பதிலாக பொருத்தமான் மாற்று யோசனையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் அக்கட்சி சுட்டிக்காட்டி யுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த சகல மக்களுக்கும் நியாயம் கிடை க்கும் வகையில் சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக இலங்கை சமா சக்கட்சி தெரிவிக்கின்றது.

இதன்படி இந்தக் கட்டமைப்பை உரு வாக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா மேற் கொண்ட அர்ப்பணிப்புக்களைப் போற்று வதாகவும் அந்தக் கட்சி மேலும் தெரிவித் துள்ளது.

(து-9)

# ஜெயலலிதாவின் சந்தேகங்களைத் தீர்த்த பிறகே சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்

## வெங்கைய நாயுடு வலியுறுத்து

(சென்னை)

சேது சமுத்திரத் திட்டம் குறித்து முதல்வர் ஜெயலலிதா எழுப்பியுள்ள சுற் றுச்சூழல் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு முதலில் தீர்வளித்த பின்னரே அதனை நிறை வேற்ற வேண்டும் என பா.ஜ.க வலியுறுத் தியுள்ளது.

இது குறித்து பா.ஜ.க துணைத் தலைவர் வெங்கைய நாயுடு நேற்றுமுன்தினம் செய் தியாளர்களிடம் கூறியதாவது,

இத்திட்டததை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்றாலும், அதற்கு முன்பாக சுற றுச்சூழல் குறித்து தமிழக முதல்வர் ஜெய லலிதா எழுப்பியுள்ள சந்தேகங்களை மத்திய அரசு தீர்க்க வேண்டும். அதன் பிறகே திட்டப் பணிகளைத் தொடங்கவேண்டும்.

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜன நாயக கூட்டணி அரசுதான் இத்திட்டததுக்கு இறுதி வடிவம் அளித்தது. நாட்டு நலனுக்கு ஏற்ற இத்திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் இத்திட்டம் நிறைவேற்றப்படுவ தற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய சிறிய பிரச்சினைகள் அனைத்தும கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவிலலை.


அரசியல் வேறுபாடு காரணமாக சிறு விஷயங்கள் அனைத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் அது மாநிலத்துக்கு உகந்ததல்ல. இதே சூழ் நிலை தொடர்ந்தால் இத்திட்டம எவ்விதம் நிறைவேறும் என்ற அச்சமும் உள்ளது.

இத்திட்டத்துக்கு ஜூலை 2ஆம் திகதி அடிக்கல் நாட்டப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில, முதல்வர் ஜெய லலிதா இத்திட்டம் தொடர்பாக மிகப் பெரிய அறிக்கையை வெளியிட்டு அதில் மத்திய அரசு சுற்றுச் சூழல் அம்சங்களை கவனத்தில் கொள்ளவில்லை என விமர் சித்துள்ளார்.

அடிக்கல் நாட்டு விழாவைப் புறக்கணிப் பதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ள தோடு மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் டி.ஆர்.பாலு, மாநலத்தில் உள்ள சுறறுச்சூழல் வாரியத் தின் அனுமதி பெறாமல், மத்திய சுற்றுச் சூழல் அனுமதியைப் பெறறுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க வின் தேசிய செயற்குழு கூட்டம் அடுத்த மாதம் 21ஆம் திகதி தொடங்கி மூனறுநாள் நடைபெறவுள்ளது. இக்கூட்டத் தில ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின ஆட்சி குறித்து விவாதிக்கப்படும். இக் கூட் டத்தில் பா.ஜ.கவின் மூத்த தலைவர் கள 200 பேர் பங்கேற்கின்றனர். இக்கூடடத் தில் காங்கிரஸ் அல்லாத கட்சி முதலவர் கள் மற்றும் எதிர்க்கட்சித தலைவர்கள் பங்கேற்கவும் அழைப்பு விடுக்கப்படும என்றார் வெங்கைய நாயுடு.

(ற)



இமாசலப் பிரதேசத்தில் ஓடும் சட்லெஜ ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட தால் அங்கிருந்து சுமார் 7ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சட்லெஜ் மற்றும் கிளை நதிகளில் நீா மட்டம் 70 முதல் 75 அடி வரை உயர்ந் துள்ளது. இதனால் ஆற்றின் மீதிருந்த 5 பாலங்கள் அடித்துச் செல்லப் பட்டன. வெள்ளப்பெருக்கு அனர்த்த ததை பார்வையிடும் அதிகாரி ஒருவர்.

இந்திய வலம்

# அத்வானி பற்றி பேச்சா?

## பெர்னாண்டஸ் மறுப்பு

(நாக்பூர்)


அத்வானி விவகாரம் தொடர்பாக ஆர்.எஸ். எஸ். தலைவர்களுடன் பேச்சு நடத்த வில்லை என தே.ஜ கூட்டணி அமைப்பாளர் ஜார்ஜ் பெர் னாணடஸ் தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் நேற்றுமுன்தினம் ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுதர் சன், பொதுச் செயலர் மோகன் பகவத் ஆகியோரைச் சந்தித்த பிறகு அவா நிருபர்களிடம் கூறுகையில்,

அத்வானி விவகாரம் பற றியோ, பீகார் தேர்தல் பற றியோ நாங்கள் பேசவில்லை. நாட்டின் பொதுவான அரசியல் நிலவரம் பற்றித்தான் பேசி னோம். பா.ஜ. தலைவராக அத்வானி நீடிக்கும் வரை அடு தது தே.ஜவுக்கு ஏற்புடைய பா.ஜ. தலைவர் யார் என்ற கேள்விக்கே இட மில்லை.

பீகார் சட்டசபை தேர்தல் விவகாரம் சுப்ரீம கோர்ட் விசாரணையில் உள்ளது. தேர் தல் நடக்கவும் பல மாதங்கள் உள்ளன. அதற்கு அவசரப்படத் தேவையில்லை என்றார்.

(ற)



# அமெரிக்கக் குடியுரிமை; இந்தியர்களுக்கு 2ஆம் இடம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவல் குடிபுகுந்தவர்களில் 2003இல அந்நாட்டு குடியுரிமை பெற்றவர் கள் எண்ணிக்கையில இந்தியர்கள் இரண் டாம் இடத்தைப் பிடித்துள்ளனர்.

அமெரிக்காவில் குடிபுகுந்தவர்களில் 4 இலட்சத்து 63ஆயிரம் பேருக்கு 2003இல் குடியுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதில் மெக்சிகோவைச் சோந்தவர்கள் 56 ஆயி ரத்து 100பேர். இந்த வரிசையில் அந்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக இந்தியாவைச சேர்ந்தவர்கள் 29 ஆயிரத்து 800 பேர் குடி யுரிமை பெற்றுள்ளதால் இந்தியாவுக்கு இரண டாம் இடம் கிடைத்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக பிலிப்பைன்ஸ் (29100), வியட்நாம் (26000), சீனா (24000) ஆகிய நாடுகள் உள்ளன. இந்தப் புள்ளி விபரத்தை அமெரிக்க மக்கள் தொகை கணக கெடுப்பு பிரிவு வெளியிட்டுள்ளது.

(ற)

## மீனவர் தொழிலுக்குச் செல்ல கடற்படை அனுமதி மறுப்பு

### ம.உ. ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடற்படையினர் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை எனக் கோரி சுழிபுரம் கெங்காதேவி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் இலங்கை மனித உரிமைகள ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி சங்கத்தைச் சேர்ந்த 16 பேர் கையொப்பமிடடு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

கையளிக்கப்பட்டுள்ள அம் மகஜரில், சுனாமி அனர்ததத்தினால் பாதிக்கப்பட்டு மீன்பிடி வள்ளங்கள் உபகரணங்களை இழந்துள்ளோம். அதன் பிறபாடு தென்னிந்திய திருச சபை ஒன்றினால் தமக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள போதும், அப்பகுதி கடற்படை அதிகாரி, எமது பகுதி கடற்தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வதற்குரிய பாஸ் அனுமதி வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பொறுப்பான கடற்படை அதிகாரியைச் சந்தித்துப் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ. மாவட்ட இணைப்பதிகாரி றோகித பிரிய தர்சன தெரிவித்துள்ளார். (ற-19)

## அஸ்ராக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்

(வட்டுக்கோட்டை)

"அஸ்ரா" கிண்ணச் சுற்றுப் போட்டியில 17 வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் - கந்தரோடை ஸ்கந்த வரோதயாக் கல்லூரிக்கும் இடையில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 25 ஆம் திகதி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 233 ஓட்டங்களுககு 6 விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஆர்.மயூரன் 86 ஓட்டங்களையும் வி.ஜோயல் செகான் 38, ய.சுதர்சனன் 36, ஜெ.செந்தூரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவச்சில் ராஜ்குமார் 2 விக்கெடடுக்களைக் கைப்பற்றினார். பதிலளித்த ஸ்கந்தவரோதயா கல்லூரி 176 ஓட்டஙகளுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழநதது. துடுப்பாட்டததில் சயந்தன் 42, நிறோஜன் 34, ரஜவன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் செந்தூரன் 4 விக்கெட்டுகளையும் வி.ஜோயல் செகான் 3 விக்கெட்டுகளையும் ஜெ.செந்தூரன் 2 விக்கெட்டினையும கைப்பறறினர்.

தனது இரண்டாவது இனிங்சை துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆட்ட நேரமுடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ய.சுதர்சனன் 39 பந்துகளில 70 ஓடடங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். ஜெ.செந்தூரன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரஜீவன் 3 விக்கெடடுக்களைக் கைப்பற்றினார். (அ-39)

## போதைப் பொருட் தொடர்பில் சிறையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 41 பேர்

(கொழும்பு)

நாட்டில் சுமார் 7 இலட்சம் பேர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி இருப்பதாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் சமாதானம தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட 41 பேர் சிறைச்சாலையில் இருப்பதாக அமைச்சின் மேலதிக செயலாளர் சந்திரா எக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 7 பேர் வெளிநாட்டவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் குற்றச்செயல்கள் தொடர்பாக சுமார் 22 ஆயிரம் பேர் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

## கரப்பந்தாட்டப் போட்டி

(வட்டுக்கோட்டை)

மாவடடங்களுக்கிடையிலான மாகாண மட்ட ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நேற்றும், இன்றும் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போடடியில் எடடு மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளும் பங்குபற்றுகின்றன.

ஆண்கள் பிரிவல் வவுனியாவை எதிர்த்து மன்னார் அணியும், கிளிநொச்சி அணியை எதிர்த்து முல்லைத்தீவு அணியும், திருகோணமலை அணியை எதிர்த்து யாழ்ப்பாண அணியும், மட்டக்களப்பு அணியை எதிர்த்து அம்பாறை அணியும் மோதவுள்ளன.

இதேபோன்று பெண்கள் பிரிவில் அம்பாறை அணியை எதிர்த்து கிளிநொச்சி அணியும், முல்லைத்தீவு அணியை எதிர்த்து மன்னார் அணியும், வவுனியா அணியை எதிர்த்து மடடக்களப்பு அணியும், யாழ்ப்பாண அணியை எதிர்த்து திருகோணமலை அணியும் மோதவுள்ளன.

இப் போட்டிகளின் பெறுகளின அடிப்படையில் அரையிறுதிப் போட்டியும் இறுதிப போட்டியும் நடைபெறவுள்ளன. (அ-19)

## ஜூலை மாதத்திற்குள் 10 ஆயிரம் கூட்டங்கள்

### ஜே.வி.பி திட்டம்

ஜீலை மாதத் தொடக்கத்திலிருந்து 'வெற்றி நாட்டிற்கு எதிர்காலம் உங்களுக்கு' எனும் தலைப்பில் நாடுமுழுவதும் மக்கள விழிப்புணர்வுக் கூட்டங்களை நடாத்த ஜே.வி.பி திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கூடடங்களை நடத்தவும், ஊர்வலங்களை நடத்தவும ஜே.வி.பி முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்திலிருந்து விலக எடுத்த தீர்மானம, தற்போதைய அரசியல் நிலவரம், ஜே.விபியின் எதிர்கால செயற்பாடுகள் என்பன பற்றி இதன்போது மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இக்கூட்டங்களின் முடிவில் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து மக்களுககு விளக்கமளிக்கும் வகையில் கைநூல் ஒன்றை அச்சிட்டு விநியோகிக்கவும் அக்கடசி திட்டமிட்டு வருகிறது. (ச)

## அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை - 2005

(கொழும்பு)

அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை (இந்து சமயம்) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் இலங்கை முழுவதும நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சையானது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களததில் பதிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில பத்தாம் ஆண்டில் சித்திபெற்று பதினொராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப் பரீட்சையில் தோற்றி சித்தியெய்தாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்திரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும கடித உறையின் இடது பக்க மேல் மூலையில 'அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை (இந்து சமயம்) 2005' எனவும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரத்தின் பெயரையும எழுத வேண்டும்.

அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2005.07.25 ஆகும். (அ-7)

## தொழிற் சங்கப் பிரச்சினைகளுக்கு தீர்வுச் சபை யோசனை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு

அரச ஊழியர்களைப் பாதிக்கும பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்வுச்சபை ஒன்றை அமைக்க அரச நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்வேறு தொழிற்சங்கங்கள் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவ்வப்போது தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்கு இந்த நடவடிக்கை எடுப்பதாக இவ் அமைச்சின் மேலதிக செயலாளர் ஜே.ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 2001, 2002 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் காரணமாக 1இலட்சத்து 43 ஆயிரம் மனித வள நாட்கள் வீணாகப் போயுள்ளதாகவும்,

தொழிற்சங்கங்கள் வேலைப் பகிஷ்கரிப்பை ஆரம்பிக்கும முன்னர் தீர்வுச் சபையில் அவர்களின் பிரச்சினைகளை முன்வைத்து கலந்துரையாட முடியும். இதற்கமைய அரச நிறுவனங்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் அந்தப்பிரச்சினைகளுககுத் தீர்வை வழங்க முடியும் என்றும்,

இந்தத் தீர்வுச் சபையை அமைப்பதற்கான யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும மேலதிக செயலாளர் ஹெட்டி ஆராய்ச்சி மேலும தெரிவித்துள்ளார். (அ-2)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலை வைத்தியசாலைகளுக்கு ஒரு முன்மாதிரி

### பிரதி மாகாணப் பணிப்பாளர் புகழாரம்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் சுத்தமாகவும் சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் காணப்படும் வைத்தியசாலை என்றால் வல்வெட்டித்துறை வைத்தியசாலையை உதாரணமாகச் சொல்லமுடியும்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை கூட்டத்தில் தலைமை வகித்து பேசிய யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன தெரிவித்தார்.

கேதீஸ்வரன் தொடர்நது பேசுகையில் கூறியதாவது, கொழும்பிலிருந்து எவர் வந்தாலும் வல்வெட்டித்துறை வைத்தியசாலையைப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறாாகள். ஆகவே இவ்வைத்தியசாலையில் சுத்தம், சுகாதாரத்தைப் பற்றி நாம் கூறதத தேவையிலலை. அப்படிச் சுத்தமாக வைத்திருககும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் க.மயிலேறும் பெருமாளை பாராட்டாமல் இருக்கமுடியாது.

வைத்தியசாலையின் சுத்தமான சூழலே நோயாளர்களின் நோய்களைக் குறைத்துவிடும். வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையானது யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் மிக சுத்தமாக பேணப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

இதை முன்மாதிரியாகப் பாவித்து யாழ். மாவட்டத்தில் ஏனைய வைத்திய சாலைகளிலும் இதைப் பின்பற்றி செயற்பட வேணடும். இதற்கு வைத்தியசாலை ஊழியர்களும் பொதுமக்களும் கடுமையாக உழைகக வேண்டும என்று கேட்டுக் கொண்டார். (அ-35)

## தென்மாகாண சபையில் ஜே.வி.பி எதிர் வரிசையில்

(கொழும்பு)

தென் மாகாண சபையில் ஜே.வி.பியினர் ஆளும் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க் கட்சி வரிசையில் இணைந்துள்ளனர்.

தமது கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதாக எடுதத தேசிய மட்டத் தீர்மானத்தையடுத்து எதிர்த் தரப்பில் அமர்நததாக சபையின் அமர்வில் உரையாற்றிய ஜே.வி.பியின் உறுப்பினர்கள் குழுத் தலைவர் சேனாரட்ண நாயக்க தெரிவித்தார்.

கூட்டமைப்பின் முக்கிய தரப்பான ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கியமைககான ஆரம்ப கொள்கைகளை உதறித் தள்ளும் வகையில் செயற்பட்டதே இந்தத் தீர்மானத்திற்கான முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும் எதிர்க் கட்சியில் தமது கட்சி சுயாதீனமாக செயற்படும். இருந்த போதிலும அரசின் சிறந்த விடயங்களுக்கு ஆதரவு வழங்கும்.

நேற்றுமுன்தினம் அமர்வின்போது பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சோந்த 20 பேர் இருந்தவேளை, எதிாக்கட்சி வரிசையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 19பேரும் ஜே.வி.பியைச் சேர்ந்த 14 பேரும இருந்துள்ளனர்.

இதேவேளை வடமத்திய மாகாண சபையின் அமர்வின் போதும் ஜே.வி.பி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளது. இதன்படி எதிாக்கட்சி வரிசையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சோநத 10பேரும், ஜேபி.வி யின் 8 பேரும சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சோந்த ஒருவரும் உட்பட 19 பேர் இருந்துள்ளனர். ஆளும் கட்சியில் 14பேர் மட்டும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர வாரிவணநாக சிவன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 04 ஆம் திகதி முதல் தொடர்ந்து பததுத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

பத்துத் தினமும் மாலை 6 மணிமுதல 7 மணிவரை ஆசிரியர் வாசுதேவாவின் சமய சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (அ-21)

## மக்கள் விடுதலை முன்னணி அவர்களது கடந்த காலத்தை நோக்கிச் செல்கிறது

(கொழும்பு)


மக்கள் விடுதலை முன்னணி அவர்களின் கடந்த காலத்தை நோக்கி மீண்டும் சென்று கொண்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திர சமரவீர புத்தளத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டபோது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், நாட்டுக்குள் பிரச்சினை அதிகரிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் இருப்பு உறுதிப் படுத்தப்படுவதாகவும்,

இடைக்ககால நிர்வாகம் வழங்க முயன்றபோது எதிர்த்தனர் என்றும், பொதுக்கட்டமைப்பு வழங்க முயற்சித்த போது எதிர்ததனர் என்றும் கூறியுள்ளார்.

மேலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டால் மக்கள் விடுதலை முன்னணிக்கு நாட்டில் எதிர்காலம் இல்லை என்றும், பிரச்சினை ஒன்றைத் தீர்க்க முயன்றால் அங்கு சென்று தொழிற்சங்கம் ஒன்றை அமைத்து சீர்குலைக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு செயற்பாட்டை நிறுத்துவார்கள் என்றும் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார். (அ-2)







யாழ்.சிறைச்சாலையில் அடிப்படை வசதிகள் கூட சீரான முறையில் இல்லாதிருப்பதைப் படங்களில் காணலாம்.

# வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி

## கேள்வி அறிவித்தல்-2005

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் ஏ-9 பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 07.07.2005 தொடக்கம் 11.07.2005 வரை பிற்பகல் 3.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 14.07.2005 பிற்பகல் 1.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 14.07 .2005 பிற்பகல் 2.00 மணி

(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப் பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, "செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், நீர்வேலி" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , இல 29, செட்டித்தெரு, நல்லூர் என்ற முகவரிக்கும் எதிர்வரும் 14.07.2005ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன் னர் நேரடியாகவே அல்லது தபால் மூலமாகவே கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர் வரி |
|---|---|---|---|---|
| 1. | அச்சுவேலி கதிரிப்பாய் கப்பிர மணியம் வீதி திருத்த வேலை | 3,500.00 | 500.00 | 75.00 |
| 2. | கரந்தன் நீர்வேலி 1ஆம் குறுக்கு வீதி திருத்தவேலை | 3,500.00 | 500.00 | 75.00 |
| 3. | உரும்பிராய் நவீன சந்தைக் கட்டடம் அமைத்தல் | 5,000.00 | 500.00 | 75.00 |
| 4. | புத்தூர் தலைமை அலுவலக நீர்த்தாங்கி அமைத்தல் | 3,000.00 | 500.00 | 75.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
27/05/2005

தம்பையா நடராசா,
செயலாளர்.

(C/1458)

# நகரசபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 06/07/2005ஆம் திகதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

வேலை 1, வேலை 2இன் பொருட்டு முறையே நிர்மாணப் பயிற்சி நிலையத்தின் (இக்ராட்) தரம் எம் 9, தரம் எம்7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம். ரூ. ச | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. ச |
|---|---|---|
| 1. வேலாயுதம் வீதி திருத்தம் | 3,400.00 | 575.00 |
| 2. சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி புனரமைப்பு | 31,000.00 | 575.00 |

கேள்விப் பத்திரங்களைச் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 04/07/2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி செயலாளர், நகரசபை , சாவகச்சேரி என்ற முகவரிக்கும், இணைப்பிரதி பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 06/07/2005ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2005/07/27

திருமதி.கு.ஆறுமுகம்
செயலாளர், நகரசபை,
சாவகச்சேரி.

(C/1461)

# மரண அத்தாட்சிப் பத்திர மோசடி; கடும் தண்டனை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்ததாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கி மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுபவர்களுக்கு எதிராகக் கடும் தண்டனை விதிப்பதற்கு நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி விசேட ஒழுங்குகள் சட்டமூலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் தண்டனை வழங்க இடமளிக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் உயிரிழந்தவர்களுக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும் என்பதை அறிந்திருந்தும் போலித் தகவல்களைச் சமர்ப்பித்து மரண அத்தாட்சிப்பத்திரங்களைப்பெற முயற்சித்து குற்றவாளிகளாகக் காணப்படும் அவர்களுக்கு 5வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த அல்லது காணாமல் போனவர்கள் சார்பில் சுனாமி விசேட ஒழுங்குகள் சட்டமூலத்திற்கு முரணான வகையில் மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற முயற்சிப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும். சுனாமியின் போது உயிரிழந்ததாகவோ, காணாமல் போனதாகவோ தகவல்களை சமர்ப்பித்து மரண அத்தாட்சிப் பத்திரம் பெறப்பட்ட பின்னர் எவரேனும் உயிருடன் இருப்பதாகத் தெரியவந்தால் அதனைப் பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்கத் தவறினால் குறிப்பிட்ட நபர் தண்டனையை அனுபவிக்கக் கூடியவராகக் கருதப்படுவார் என்றும் நீதியமைச்சினால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ர-8)

## கண்ணிவெடித்தாக்குதலில்

# படையினரின் புறக்கணிப்பு புலப்படுகிறது

போராளிகள் பயணம் செய்யும் போது மேலதிக பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும் என்கின்ற பொறுப்புணர்ச்சி அந்தப் போராளிகளை பொறுப்பேற்ற படைத்தரப்பினருக்கு இருந்திருக்க வேண்டும் என மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கிளிநொச்சியிலிருந்து இராணுவப் பாதுகாப்புடன் வருகை தந்த போராளிகளின் வாகனத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலைக் கண்டித்து கருத்துத் தெரிவித்த போதே இளந்திரையன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயணம் மேற்கொள்ளும் போது அவற்றில் தாமதத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு மெத்தனமான நடைமுறைகளை அவர்கள் கைக்கொள்வதுடன் இவ்வகையான தாக்குதல் ஏற்படக்கூடியதான ஒரு பொறுப்புணர்ச்சியற்ற பயணவழி ஏற்பாட்டை அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

அரச படையினருக்கு இந்த கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றும் புதிதல்ல. இவர்கள் நினைத்து இருந்தால் அச்சுறுத்தல் பகுதிகளில் இவர்களுடைய வீரர்களை விட்டு கண்ணிவெடிகள் இருக்கின்றதா என சோதித்துப் பார்த்திருக்க முடியும். இது அவர்கள் வழமையாக செய்கின்ற வேலையாகும். இதில் ஏதோ ஒரு சூழ்ச்சியும் வேண்டுமென்ற ஒரு புறக்கணிப்பாக நடந்து கொண்ட நிலை இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

(அ-04)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

## ஜே.வி.பியுடன் முஸ்லிம்கள் சேருவது வரலாற்றுத் தவறாகிவிடும்

இந்த நாட்டில் அனைத்து உரிமைகளும் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

இலங்கையை தாக்கிய சுனாமியால் எல்லா இன மக்களும் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையால் முஸ்லிம்களுக்கு பேரழிவு ஏற்பட்டது.

எனவே, சுனாமி நிவாரணப்பணி இன மத மொழி என்ற பேதமைகள் இம்மியும் இல்லாதவாறு மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகள் பக்கச்சார்புடன் நடைபெறுமாக இருந்தால் அதனை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான்.

எனவே நிவாரணப் பணி என்பது சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் அவர்களின் பாதிப்பின் தன்மைக்கேற்ப வழங்கப்பட வேண்டும். இதனையே இலங்கைக்கு நிவாரண உதவிகளை வழங்கய உலகநாடுகளும் விரும்புகின்றன.

அதன் காரணமாகவே சுனாமி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து ஓர் பொதுவான உடன்பாட்டிற்கு வரவேண்டுமென அந்நாடுகள் வலியுறுத்துகின்றன.

அதன் பிரகாரம் அரசும் புலிகளும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ளன. இங்கு இரண்டு தரப்பும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டாலும் வழங்கப்படவுள்ள நிவாரண உதவிகளை உலக நாடுகளே வழங்கின என்பது நினைவுபடுத்த வேண்டிய ஒன்றாகும்.

அதாவது உலகநாடுகளால் வழங்கப்பட்ட உதவிகளை பிரித்து ஒழுங்குமுறையில் வழங்குவதற்கான ஓர் ஏற்பாடே பொதுக்கட்டமைப்பாகும். அதேநேரம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை உரிய நிவாரணக்கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

உறவுகளை பறிகொடுத்து உடைமைகளை இழந்து கட்டாந்தரையில் போடப்பட்ட கொட்டில்களில் வாழ்கின்ற மக்கள் படும் அவலம் சொல்லும் தரம் அன்று.

ஆயினும் அவர்கள் ஏழைகள் என்பதால் அவர்களின் துன்பங்கள் அரங்கேறுவது இயலாத காரியமே. இதனை வசதி வாய்ப்புக்களோடு இருக்கின்ற அரசியல்வாதிகள் தெரிந்து கொள்வதற்கு நியாயம் இல்லை.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் உலகநாடுகளின் நிவாரண உதவிகள் இலங்கையை நோக்கி வந்தபோதிலும் இன்று வரை அந்த உதவிகள் பகிரப்படவில்லை என்றால் மக்களின் துயர் துடைக்கும் அரசியல் வாதிகளும் அரசின் அசமந்தத்திற்கு எதிராக கோஷம் எழுப்பி போராட்டம் நடத்தும் மக்களும் இல்லை என்பதே பொருள்.

சுனாமியின் தாக்கம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் நிவாரணம் வழங்கப்படாமைக்கு அரசின் அசமந்தமே காரணம் என்பது உலகறிந்த உண்மை.

நிவாரணப்பணியை நடைமுறைப்படுத்த வேண்டும் எனில், அரசும் விடுதலைப்புலிகளும் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவதே ஒரேவழி. எனினும் ஆளும் தரப்பிற்குள் ஏற்பட்ட இழுபறியால் பொதுக்கட்டமைப்பு காலங்கடத்தப்பட சுனாமி நிவாரணமும் காலம் கடந்து போயிற்று.

தற்போது பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதனால் நிவாரணப்பணிகள் ஒழுங்காக நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ள நிலையில்-

இருந்தும் பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் ஜே.வி.பியுடன் இணைந்துகொள்ள சில முஸ்லிம் அமைப்புக்கள் முற்பட்டுள்ளமையானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த அமைப்புகள் செய்யும் பெருந்துரோகமாகும். இதனை வரலாறு ஒருபோதும் மன்னிக்க மாட்டாது.

-பொதுக் கட்டமைப்பு-

# சுனாமியால் அழிவடைந்த பகுதிகளை கட்டியெழுப்ப நல்லதொரு சந்தர்ப்பம்

## திட்டமிடல் செயலக பதில் பணிப்பாளர் ரஞ்சன்

(கிளிநொச்சி)

சுனாமி ஆழிப்பேரலையால் அழிவடைந்த பகுதிகளை கட்டியெழுப்பக்கூடிய நல்லதொரு சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது என தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலக பதில் பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழவிடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெறற வடக்கு கிழக்கு சுகாதார மேம்பாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பைத் திட்டமிடும் உள்ளகச் செயலமர்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்குகிழக்குப் பிரதேசங்களில் திட்டமிடல்கள் தொடர்பாக முனபு பல தடவைகள் கலந்துரையாடலகள் நடை பெற்று அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்குப்பகுதிகளின திட்டமிடல் தொடர்பாக கருதும் போது ஆழிப்பேரலையால் அழிவடைந்த பகுதிகளை கட்டியெழுப் பக்கூடிய நல்ல தொரு சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.

திட்டமிடலை பொறுத்தவரையில் இரு விடயங்களாக பார்க்கவேண்டியுள்ளன முதலாவது உடன டியாக செய்ய வேண்டிய திட்டமிடல், இரண்டாவது முழுமையாக செய்ய வேண்டிய திட்டமிடல், முதல் கடடம் எனில், சர்வதேச உதவிகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகளில் சுகாதார மேம்பாடுகளை எவ்வாறு செய்யப்போகின்றோம் என்பதை யாவரும் கருத்தில் கொள்ளவேண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாக திட்டமிடல்களை மேற்கொள்வதன் ஊடாகவேலைத்திட்டங்களை விரிவாகக்கொண்டுசெல்லாம். மாவட்ட ரீதியாக வேலைத் திட்டங்களுக்கான திட்டமிடல்களை விரைவு படுத்தினால் சீர்ப்பாடுகளைத் துரிதமாக்கலாம்.

ஆழப்பேரலைக்குப் பின்னரான அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தினால் அபிவிருத்தித்திட்டங்களை வேகமாக முன்னொடுக்கலாம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேர்த்தியான சுகாதாரத்திட்டங்களை ஒழுங்கு படுத்தினால்தான் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம்.

இரு தசாப்தகால யுத்தத்தினாலும ஆழிப்பேரலையினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை விரைவாக திட்டமிடல்களை மேற கொள்வதன் ஊடாக வேலைத்திட்டங்களை விரைவாகக் கொண்டு செல்லாம். மாவட்ட ரீதியாக வேலைத்திட்டங் களுக்கான திட்டமிடல்களை விரைவு படுத்தினால் செயற்பாடுகளை துரிதமாக்கலாம்.

திட்டமிடல்களை ஒழுங்காக மேற்கொண்டு சர்வதேச உதவி நிறுவனங்கள் மூலமாக சுகாதார அபிவிருத்திகளை துரிதப்படுத்தலாம்.

திட்டங்கள் எதுவும் இல்லாமல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாது. உதவிகள் கிடைக்கின்றபோதும் அவ் உதவிகளைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையும் உருவாகலாம்.எனவே திட்டமிடல்கள் எல்லா விடயங்களுக்கும் அவசியமானதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

முற்பகல் 10.00மணிக்கு தமிழீழ சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ச. விக்கிரமன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கருத்துரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய்மகேஸ்வரன் நிகழ்த்தினார்.மட்டக்களப்பு,திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களின் பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர்களும் இச் செயல் அமர்வில் கலந்துகொண்டு தமது பிரதேச சுகாதார நிலைமைகள் தொடர்பான கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். (ற-4)

# அரசபடைகளின் அடாவடித்தனங்கள் உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் க.கா. குழுவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரச படைகளினதும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினரதும் வழித்துணையுடன் கிழக்கு மாகாணத்திற்கு பயணித்துக்கொண்டிருந்த அரசியல் போராளிகள் மீது கோழைத்தனமாக அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து கிளைமோர் தாக்குதலை நடாத்திய ஸ்ரீலங்கா அரச படைகளின் செயலினை தாம வன்மையாக கண்டிப்பதாகக் குறிப்பிட்டு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின யாழ். மாவட்டத் தலைவரிடம் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கையளிக்கப்பட்டுள்ள அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இக் கொலை முயற்சி ஸ்ரீலங்கா அரசினால் நன்கு திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது.ஏனெனில் பாதுகாப்பு வழங்குவதற்கு சென்ற ஸ்ரீலங்கா படையினர் எவருமே அரசியல் போராளிகள் பயணித்த வாகனத்தில் பயணம் செய்யவில்லை.இது ஏற்கனவே தாக்குதலுக்கு திட்டமிட்ட படையினரே பாதுகாப்பு வழங்குவதாக பாசாங்கு செய்துள்ளனர் என்பதை தெட்டத்தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் நேருக்கு நேர் நின்று போர்செய்த போர்வீரர்களைத் தோற்கடிக்கமுடியாத அரசு யுத்த நிறுத்தகாலத்தில் அதனைச் சாதித்துவிட எண்ணுவதை தங்களின் மேலான கவனத்திற்கு சுட்டிக்காட்டுகிறோம்.யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துகின்ற அல்லது கண் காணிக்கின்ற பொறுப்பு தங்களிடமே உள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றுள்ள இச் சம்பவம அப்பட்டமான ஒரு யுத்த நிறுத்த மீறலே. எனவே இதனை மேற்கொண்டவர்களை உடன் இனம் கண்டு உரிய நடவடிககைகள் மேற்கொள்ளவேண்டும் எனத் தங்களிடம் கோரி நிற்கின்றோம்.

அண்மைக்காலமாக எமது மக்கள் எமது தேசியத் தலைவரிடம் போருக்கு ஆணை இடுங்கள் என வேண்டுகோள் விடுப்பதை தாங்கள் அறிந்ததே.மக்களை இவ்வாறான நிலைக்கு கொண்டு சென்றது ஸ்ரீலங்கா அரசின் புரிந்துணர்வு உடன்படிக்கை மீதான அசமந்தபோக்கும் போராளிகள் மீதான படுகொலைச்சம்பவங்களுமேயாகும்.

கொதிநிலையில் போரே எமக்கு விடிவைப் பெற்றுத் தரும என எண்ணியிருந்த மக்களுக்கு அன்றைய சம்பவம் இன்னமும் போர் மூலமே எமது இனப்பிரச்சினை தீர்க்கப் படும் என்ற எண்ணத்தை வலுவூட்டியுள்ளது.புரிந்துணர்வு உடன்படிக்கையை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தும் என எமது மக்கள் இனியும் எண்ணி ஏமாறதயாராக இல்லை.

இனி எமது மக்களின் உரிமை நிலையை புரிந்து கொண்டு சமாதான சூழல் தொடரவேண்டுமாயின் தாங்கள் ஸ்ரீலங்கா அரசினதும் படைகளினதும் அடாவடித்தனங்களை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என தமிழீழ மக்களின் சார்பாக தங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர்கள் 2வது நாளாக நேற்றும் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் இரண்டாவது நாளாக நேற்று தொடர்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் .இரண்டு அம்சக்கோரிக்கைகளை முன் வைத்தே இவர்கள் நேற்று முன்தினம் முதல் தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களின் சம்பள முரண்பாடுகள் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சீர் செய்யப்பட்டு அத் திகதியிலிருந்து புதிய சம்பளத்திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படல்வேண்டும்.

மற்றும் 9.3.1997ற்கு பின்னர் பல்கலைக்கழக சேவையில் இணைந்துகொண்ட ஊழியர்களுக்கு மாதாந்த இழப்பீட்டுப் படி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய வழங்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள தொடர்வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின் றனர்.

பாதுகாப்பு நீர்விநியோகம் ஆகிய பகுதிகளிலும் கடமை புரியும் ஊழியர்கள் இந்தப்போராட்டத்தில் ஈடுபடவில்லை.

தமது இக்கோரிக்கைகளுக்கு உறுதியான ஒரு முடிவு கிடைக்கும் வரை தாம் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் தங்கராஜா தெரிவித்தார். (ற-19)

## வெங்காயச் செய்கை

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் இம்முறை வெங்காயச்செய்கை மிக மந்தமாக காணப்படுகிறது. இதனால் வெங்காயத்தின் விலை அதிகரித்துக்கொண்டே போகிறது.

விதைவெங்காயத்தைப் பெறுவது பெரும் கஷ்டமாக இருப்பதால் வெங்காயச் செய்கை செய்வதா, விடுவதா என்ற கேள்விக்குறியில் விவசாயிகள் இருக்கின்றனர். (து-35)




சாயி அருளமுதம்

இக் கலியுகத்திலே அன்பினாலும் இரக்கத்தினாலுமே தீயவர்களைச் சீர்திருத்தி அவர்கள் புனர்வாழ்வுக்கு வகைசெய்யவேண்டும் அதன் காரணமாகவே ஆயுதமின்றி இந்த அவதாரம் தோன்றியுள்ளது. "அன்பு" என்னும் அரிய செய்தியுடன் அது வந்துள்ளது. கொடியவர்களையும் ,தீயவர்களை களையும் மாற்றியமைக்கக் கூடிய ஒரேயொரு ஆயுதம் இறைவன் நாமத்தை அன்புடன் உச்சரித்தலேயால் இறை நாமம் தெய்வீகத்தில் மகிமையினால் நறு மணம் பெற்றுள்ளது. அதனால் உள்ளத்தில் அதைப் புரட்டி எடுக்கும் பொழுது மாயையில் இருந்து விடுதலை அளக்கும் ஒரு கருவியாக அது மாற்றம் பெறுகிறது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# பொலிஸ் உத்தியோகத்தர் தமிழீழ நீதிமன்றால் விடுதலை

(கிளிநொச்சி)

தமிழீழ நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சீனன்குடா பொலிஸ் உத்தியோகத்தர் அமல் பிரசன்னா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 16 ஆம் திகதி கிண்ணியாப் பிரதேச செயலர் பிரிவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உப்பாறுப் பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்த அவர் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளால் கைதுசெய்யப்பட்டார்.

அவர் சம்பூரிலுள்ள தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் இவரது வழக்கு சம்பூரில் தமிழீழ நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஆர்தர் ட்வீய்டன் ஆகியோர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

கான்ஸ்டபிள் பிரசன்னாவை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலைத் தலைவர் ஆர்தர் ட்வீய்டனிடம் ஒப்படைத்தார்.

கான்ஸ்டபிள் பிரசன்னாவை அவரது குடும்பத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை ஆர்தர் ட்வீய்டன் மேற்கொண்டார். (ச)

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கு புதிய துணைவேந்தர் நியமனம்

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் நாரதர் வர்ண சூர்ய நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பீடாதிபதியாக இருக்கும் பேராசிரியர் வர்ணசூரிய நாளை முதல் துணைவேந்தராகப் பதவி வகிக்க வுள்ளார்.

மாணவ சங்கங்களின் செயற்பாடு காரணமாக தனது பதவியை இராஜிநாமாச் செய்வதாக தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சந்திர விஜயபண்டார ஜனாதிபதிக்கு அறிவித்ததனை அடுத்து புதிய துணைவேந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# காணாமல்போனோர் தொடர்பாக மனிதஉரிமைகள் செயலகம் விசாரணை

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை வட கிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழு மேற்கொண்டுள்ளது.

இக்குழு கடந்த சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் யாழ். மண்டைதீவுப் பகுதி மக்களைச் சந்தித்து, அங்கு காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி 1990 ஓகஸ்டிலிருந்து செப்ரெம்பர் வரை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட 62 பேர் இதுவரை காணாமல்போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த 62 குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு காணாமல்போனோர் தொடர்பான விபரங்களை மனிதஉரிமை செயலகம் சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

# பொதுக் கட்டமைப்பு விடயத்தில் கதிர்காமரின் நிலை என்ன?

## ஐ.தே.கட்சி கேள்வி

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நிலை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.தே.கவின் பிரதித் தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் குழப்பமான நிலையைப் போலவே லக்ஷ்மன் கதிர்காமரின் நிலையும் உள்ளது. அவர் தனது நிலையை விளக்கவேண்டும்.

இதுபோன்ற ஒப்பந்தங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், தலைவர்களுக்கும் விளக்குகின்ற பொறுப்புக்கொண்டவர். அவர் தனது கடமையைச் செய்யாதது மட்டுமல்ல, இப்பிரச்சினையில் தனது நிலையையும் தெளிவுபடுத்தவில்லை.

நாடாளுமன்றத்தில் பொதுக் கட்டமைப்பு தாக்கல்செய்யப்பட்டபோது சபைக்கும் கதிர்காமர் வரவில்லை. இது குறித்துக் கருத்துக்களையும் வெளியிடவில்லையென அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# பொதுக்கட்டமைப்பிற்கு சுவிஸ் அரசு ஆதரவு

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளதை சுவிஸ் அரசு வரவேற்றுள்ளது. கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் முதன்முறையாக தேசிய, பிரதேச, மாவட்ட அளவில் இணைந்து செயலாற்ற முன்வந்துள்ளனர்.

இக்கட்டமைப்பின் மூலம் ஆழிப்பேரலையால் அழிந்தவை மீளக்கட்டமைக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. குறிப்பாக ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு இது உதவியாக அமையுமென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சாரதியைத் தாக்கி வாகனம் கடத்தல்

## வவுனியாவில் சம்பவம்

வாகனச்சாரதியின் கைகால்களைக் கட்டி மலசலகூடக் குழிக்குள் போட்டுவிட்டு அவரது 20 லட்சம் பெறுமதியான வாகனம் கடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, வவுனியா சாஸ்திரி கூழாங்குளம், கல்மடு வீதியிலுள்ள நோயாளி ஒருவரை அநுராதபுரத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லவேண்டுமெனத் தெரிவித்து மூவர் குறிப்பிட்ட வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

பின்னர் குறிப்பிட்ட இடத்திற்கு நோயாளியை ஏற்றவென வான்சாரதி சென்றபோது அங்கு சாரதியை தாக்கிவிட்டு வாயையும், கைகளையும் கட்டி பாவனையில் இல்லாத மலசலகூடக் குழியினுள் போட்டுவிட்டு வாகனத்தைக் கடத்திச்சென்றுள்ளனர்.

மலசலகூடக் குழியினுள் இருந்து சாரதி அபாயக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து வீதியால் சென்றவர்கள் அவரைக் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதுகுறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-8)

## இனவாதத்திற்கு....

கொண்டன.

கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச்சென்று கோட்டை பிரதானவீதியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இனவாதக் கொள்கையைப் புறக்கணித்துவிட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷம் எழுப்பினர். (ச-8)

## அரசியல்துறை...:

கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பிற்கு பயணமான அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் அரசியல்துறைப் போராளிகள் 40 பேரை ஏற்றிச்சென்ற வாகனத் தொடரணிமீது வெலிகந்தையில் வைத்து இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் குறித்து இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

## மரபணுச்...

கருத்துக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் பேராசிரியர் சந்திரசிறி கிரியல்ல தலைமையில் இந்த மரபணுச் சோதனை நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ச)

## சிறைச்சாலைக்குள்....

தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்புச் சிறைச்சாலைக்குள் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து விசாரணை நடாத்த இரண்டு பொலிஸ் குழுக்களை நியமிக்குமாறு நீதியமைச்சர் டபிள்யூ.ஜே.செனவி ரட்ண பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

துப்பாக்கி சிறைச்சாலைக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது குறித்தும் தனியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலைக்குள் போதைப்பொருள், கையடக்கத் தொலைபேசிப் பாவனை கண்டுபிடிக்க நடாத்தப்படும் சோதனை தொடர்பான வாராந்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதியமைச்சர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளார். (ச-4)

## முஸ்லிம்களை உள்ளடக்கும்....

முன்னணியினருடான சந்திப்பில் ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இதேவேளை ஆழிப்பேரலை நிவாரண சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது சம்பந்தமாக நோர்வேத் தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரணசபையின்கீழ் நியமிக்கப்படவுள்ள உப குழுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை சமப்படுத்தும் நோக்கில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதையடுத்து இப்பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் யோசனைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் மீது அவர்கள் காண்பிக்கும் எதிர்ப்பைக் குறைப்பதற்காகவும், உப குழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது சம்பந்தமாக ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை நிவாரணசபையின் கீழ் அமைக்கப்படவுள்ள பிரதேசக் குழுக்களில் 5 விடுதலைப் புலிப் பிரதிநிதிகளும், 3 முஸ்லிம் பிரதிநிதிகளும், 2 அரசாங்கப் பிரதிநிதிகளும் அங்கம்வகிப்பார்கள்.

தற்போது இருக்கும் இரு அரச பிரதிநிதிகளில் ஒருவரை முஸ்லிம் பிரதிநிதியாக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி பிரதேசக் குழுக்களில் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகள் அங்கம்வகிப்பர்.

அத்துடன் இந்தக் குழுக்களில் இரு முஸ்லிம் பிரதித் தலைவர்களை நியமிப்பது சம்பந்தமாகவும் கவனம்செலுத்தப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக நோர்வேயுடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி முஸ்லிம் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார். (ச-4,8)


விற்பனையாளர்கள் தேவை

எமது புத்தகசாலையில் விற்பனையாளராகப் பணிபுரிவதற்கு ஆண்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

நிர்வாகி
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்
T.P: 021 222 2537

மனோகரா யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹரீஸ் ஜெயராஜ்

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
5 அடி 2 அங்குலம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ்
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அஜித், தேவயானி நடித்த
காதல்கோட்டை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும் மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி றேடர்ஸ்
மேல்மாடி இல.135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226


[illegible] ரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.